[எழு: நட்பாட்சி நயப்பாரும், நட்பாரும். பயனி: ஆம், இல். கோட்டுப்பூ. (வி. 68. 119.) வேட்டது. (வேள்-கிறேன்-வேட்டேன்.) (வி. 95.) நட்பாட்சி. (வி. 150. 96.) தோட்ட = தோண்டின.]

[கடை, இடை, தலையானவர் நட்பு இன்னது.]

63. கடையாயார் நட்பிற் கமுகனையர்; ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்;
தலையாயார்
எண்ணரும் பெண்ணை போன் றிட்ட ஞான் றிட்டதே;
தொன்மை உடையார் தொடர்பு.

[எழு: கடையாயார், இடையாயார், தலையாயார், உடையார். பயனி: அனையர், அனையர், இட்டதே, சொன்னார் (தொகை.) கடையாயார்= கடைவரிசையில் உள்ளார். ஆயார் = ஆகினார். (வி. 82. (7.)) அனையர். (வி. 109.) எண்ணரும் = எண்ணுதற்கரிய. (வி. 153. 121.)]

[அன்போடு பொருந்திய உபசாரம்; அன்பின்றிச் செய்த உபசாரம்.]

A dinner of herbs with affection is ambrosia. The greatest delicacies without it, nux-vomica.

64. கழு நீருட் கார் அட’ கேனும் ஒருவன்
விழுமி’தாக் கொள்ளின் அமி’ழ்தாம்;
விழுமிய
குய்த் துவை யார் வெண் சோறே ஆயினு’ மேவாதார்
கை’த்துண்டல் காஞ்சிரங் காய்.

[எழு: அடகு, உண்டல். பயனி: ஆம், காய் (ஆகும்.) கார். (வி. 121. 154.) விழுமிதா = விழுமியது + ஆ = ஆக. (வி. 93.)]

[இவற்றில் இவை நல்லனவாம்.]

Hatred better than the friendship of the unwise; death than incurable disease; to be killed than to be despised; abuse than undeserved praise.

65. தெளி’விலார் நட்பிற் பகை நன்று; சாதல்
விளியா வ’ருநோயி ’னன்’றால்;
அளிய
இகழ்தலிற் கோறல் இனிதே மற் ’றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

[எழு: பகை, சாதல், கோறல், வைதல். பயனி: நன்று, நன்று, இனிது, நன்று. நட்பில். (வி. 61. ஒப்பு.) ஆல், ஏ, மற்று, அசைச்சொற் கள். அளிய. (வி. 140.) கோறல் = கொல்லல். (வி. 41.)]

XII. பாடம்.

ON BEARING WITH THE FAULTS (OF ONE'S FRIENDS.)

பிழைபொறுத்தல்.

[எதினும் பிரிதல் தீது.]

66. மரீஇப் பலரொடு பன்னாண் முயங்கிப்,
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்;—
பரீஇ உயிர்செகுக்கும் பாம்போடும் இன்று
மரீஇப் பின்னைப் பிரிவு.

Examine well and form friendships only with the excellent. *Never forsake a friend!*

[எழு: ஒருவர் (தொகை), பிரிவு. பயனி: வேண்டும், இன்று. செயப்படு: தக்காரை. ஏ—அசைநிலை. மரீஇ, பொரீஇ, பரீஇ. (வி. 79.) பன்னாண் = பல்நாள். (வி. 39. 36.) பொருட்டக்கார் = பொருளாகத்தக்கவர். (வி. 57. 37.)]

[சிநேகர் குற்றங்களைத் தம்முள்ளத்தில் மறைக்கவேண்டும்; குற்றமில்லாதவர் பூவுலகிலில்லை.]

67. நல்லார் எனத்தா நனி விரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்;
நெல்லுக் குமிஉண்டு; நீர்க்கு நுரைஉண்டு;
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

Bear with the faults of friends. None faultless.

[எழு: ஒருவர் (தொகை), உமி, நுரை, புல்லிதழ். பயனி: வேண்டும், உண்டு. என. (வி. 114.) நனி. (வி. 120.) கொண்டாரை. (வி. 124. (5.)) புல்லிதழ். (வி. 150.) பூவிற்கும் = பூ + இன் + கு + உம். (வி. 23. 65. 35. 24.)]

[நல்லோர் பிழை பொறுப்பர்.]

68\. செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்,
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாழ்நர்;
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

Bear with your friends' faults, as the cultivator bears with the stream that often bursts its enclosures.

[எழு: வாழ்நர், கொண்டார். பயனி: செய்வர், பொறுப்பர். ஏ, அசைநிலை. செறுத்தோறும் = செறுக்குந்தோறும். (வி. 153.) நீர் நசை = நீரை நசைந்து, அல்லது நீரின் நசைவினால். (வி. 153.) வாழ்நர். (வி.95 = வாழ்வர்.)]

[பொறுத்தல் நட்பை வளர்க்கும்.]

69\. இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றோ?—
நிறக் கோங்
குருவ வண் டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறை இருவர் நட்பு.

Bear all things! The patience of one is the friendship of two.

[எழு: பொறுத்தல், பொறை. பயனி: தகுவது, நட்பு (ஆகும்.) இறப்பவே.* (வி. 140.) நிறக்கோங்கு உருவ வண்டு ஆர்க்கும் உயர் வரை நாட! = பொன்னிறத்த கோங்கம் பூவிலே அழகிய வண்டுகள் ஆர்ப்பரிக்கும் உயர்ந்த மலை நாடனே. (வி. 152. 162.) ஒருவர், இருவர். (வி. 159.)]

*"Though they do things so bad as to pass (the limits of forbearance)."

[நட்டார் செய்த பிழையால் அதிக மனவருத்தம் உண்டாகும்.]

"To be wroth with those we love, doth work like madness in the brain!"

70\. மடி திரை* தந்திட்ட வான் கதிர் முத்தங்
கடு விசை நாவாய் கரை அலைக்குஞ் சேர்ப்ப!
விடுதற் கரியார் இயல்பிலர் எல் நெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

*"EVER CURLING WAVES."

[எழு: அரியார். பயனி: தீ (ஆவார்.) மடிதிரை. (வி. 153.) தந்திட்ட (வி. 124. (5.)) கடு. (வி. 119.)]

☞ The student will recognize in this and many other verses from the நாலடி a beautiful description of the old pandiyan country, with its seaboard (சேர்ப்பு,) its extensive forests, and limiting hills, (வரை.)

XIII. பாடம்.

FRIENDSHIP.

நட்பு.

[நண்பரைப் பிழையின் பொருட்டுப் பிரியல் ஆகாது.]

Friends are not to be forsaken on account of their faults. Do men cut off their hand because it has struck their eye?

71\. இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்த றகுவதோ?—
துன்னருஞ் சீர்
விண் குத்து நீள் வரை வெற்ப! களைபவோ
கண் குத்திற் றென்று தங் கை?

[எழு: துறத்தல், மனிதர் (தொகை.) பயனி: தகுவதோ, களைபவோ. துன்னருஞ் சீர் விண்குத்து நீள் வரை வெற்ப! = கிட்டுதற்கு அரிய நன்மையை உடைய வானைப் பொருந்திய நீண்ட மலை நாடனே! களைப. (வி. 83.) குத்திற்று. (வி. 83.) துன்னா. (வி.) 90.]

[சிநேகிதரை விட்டுப்பிரிந்தவர் பிழை செய்தவரினுங் கடையர்.]

Those who forsake friends that have committed a fault are worse than they.

72. இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்று செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர்;
கலந்தபிற்
றீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரிற் கடை.

[எழு: சான்றோர், இல்லாதார். பயனி: காணார், கடை (ஆவர்.) செயப்படு: பழியை. கலந்து = நட்புக்கொண்டபின். நட்பரைத்திருத்த வேண்டுமே அல்லாமல் அவர்களுடைய குற்றங்களைப் பலர்க்கு அறிவிக்கக் கூடாது. அவரில். (வி. 61.)]

[சிநேகிதன் பிழைகளை வெளிப்படுத்தல் ஆகாது.]

If friends prove unfaithful, love them the more, and keep their unfaithfulness in your own bosom.

73. தமர் என்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமர் அன்மை தாம் அறிந்தார் ஆயின், அவரைத்
தமரினு நன்கு மதித்துத், தமர் அன்மை
தம்முள் ளடக்கிக் கொளல்.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: அடக்கிக்கொளல். தமர். (வி. 123.) அன்மை. (வி. 94. 152.) தம், சாரியை. (வி. 108. 74.) நன்கு. (வி. 120.) கொளல். (வி. 85.)]

[சிநேகிதர் குற்றங்களை வெளிப்படத் தூற்றினவன் சாபம்.]

He who pries into his friends faults shares the punishment of the revealer of secrets.

74. குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபி னாடித் திரிவேனேல்
நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க,
அறைகடல் சூழ் வைய’ நக.

[பாட்டு 80 காண்க.]

[எழு: யான். (தொகை.) பயனி: செல்க. காவா = காக்காமல். செல்வுழி = (செல், வ், உழி.) (வி. 153. 63. 152. 25.) செல்க. (வி. 85.)]

[நல்லோர் நட்பு மழையைப்போலும்; தீயோர் நட்பு வறட்சியைப்போலும்.]

75. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்,
மாரி போன் மாண்ட பயத்ததாம்; மாரி
வறந்தக்கால் போலுமே,— வால் அருவி நாடா!—
சிறந்தக்கால் சீரிலார் நட்பு.

The friendship of the excellent, like rain; of others like drought.

[எழு: கேண்மை, நட்பு. பயனி: ஆம், போலும். ஏ, அசைநிலை. சீரியார் = சீரையுடையர். (வி. 93.) சிறப்பிற்றாய் = (சிறப்பு + இன் + து + ஆய்) = சிறப்பினையுடையதாகி. (வி. 93.) பயத்ததாம் = பயனையுடையதாம். (வி. 93.)]

XIV. பாடம்.

FRIENDSHIP.

நட்பு.

[அறிவுள்ளோர் சிநேகம் மோட்சத்தைப்போலவும்; அறிவில்லார் சிநேகம் நரகத்தைப் போலவும் ஆகும்.]

76. நுண்ணுணர்வி னோரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்; நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லாப்
புணர்த னிரயத்துள் ஒன்று.

Bliss enjoyed with the wise is heaven; association with the ignorant and worthless is hell.

[எழு: நுகர்வுடைமை. பயனி: விழைவிற்று, ஒன்று (ஆகும்.) ஏ, ஆல், அசைநிலைகள். நுகர்வுடைமை (நுகர், வ், உடைமை.). (வி. 153.) விழைவிற்று = விழைவினது. (வி. 93.) ஒக்கும். (வி. 125.)]

[அன்பில்லாருடன் கொண்டநட்பு நிலைநில்லாது.]

77. பெருகுவது போலத் தோன்றி வைத் தீப் போல்
ஒரு பொழுதுஞ் செல்லாதே நந்தும்;—
அருகெல்லாஞ்
சந்தன நீள் சோலைச் சாரன் மலை நாட!—
பந்தம் இ லாளர் தொடர்பு.

Intimacy with those who have no sympathy is like fire in the stubble.

[எழு: தொடர். பயனி: நந்தும். வைத்தீப்போல் = வைக்கோல் நெருப்பைப்போல். (வி. 132.) நீள் = நீண்ட. (வி. 153.)]

[பெரியோருடன் நட்புக்கொண்டாலுங் கீழோர் நல்லோர் ஆகார்.]

78. ஒரு நீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரி நீர்க் குவளையை ஆம்பல் ஒக் கல்லா,
பெரு நீரார் கேண்மை கொளினு நீர் அல்லார்
கருமங்கள் வேறு படும்.

The water-lily does not become a lotus by being in the same tank with it: so evil persons will act in conformity with their natures.

[எழு: ஆம்பல், கருமங்கள். பயனி: அல்லா, வேறுபடும். செயப்படு: குவளையை. நீர் = நீரிலே. (வி. 152.) கடைத்தும் = இடத்தை உடையன ஆயினும். (வி. 93. 113.) ஒக்கல்லா = ஒக்க மாட்டாது. (ஒக்கு + அல்லா.) (வி. 125.89.) கொளினும்=கொண்டாலும். (வி. 86. 142.)]

[உரிமையில்லாதவரது நட்பு தீது.]

79. முற்றற் சிறு மந்தி முற் பட்ட தந்தையை
நெற்றுக் கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலை நாட! இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

Friendship with the uncongenial is bad.

[எழு: நட்பு. பயனி: இன்னாது. முற்றல் = முற்று + அல்லாத. (வி. 153.)]

[நண்பனது குறைதீராதவனுக்கு உறுஞ்சாபம்.]

80. முட்டுற்ற போழ்தின் முடுகி, என் னார் உயிரை
நட்டான் ஒருவன் கை நீட்டேன் ஏல்,
நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க,
நெடுமொழி வையம் நக.

The curse of him who does not offer his life for his friend.

[பாட்டு 74 காண்க.]

[எழு: யான். (தொகை.) பயனி: செல்க. (வி. 85.) ஆர். (வி. 121.) செல்வுழி = செல் + வ் + உழி; இதில் வ் இடைநிலை. (வி. 153. 81.) நெடு–மொழி. (வி. 154 .) நக. (வி. 140.)]

[நல்லோர் நட்பு இனிது; மற்றோர் நட்பு கைப்பு.]

81. ஆன்படு நெய் பெய் கலனுள் அது களைந்து,
வேம்படு நெய் பெய் தனைத்தரோ,—
தேம்படு
நல்வரை நாட! நயம் உணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு.

Forsaking the friendship of the discerning, and cultivating that of the silly, is like pouring Margosa oil into a vessel where ghee has been before.

[எழு: நட்பு (க்கொள்ளல்.) பயனி: அனைத்து. அரோ, அசைநிலை. படு. (வி. 153.) தேம் = தேன். (வி. 137. 93.) பெய்தனைத்து = பெய் தாற்போலும். (வி. 137. 93.) இதில் பெய்து = பெய்தால். நாட = நாடனே! (வி. 64.) ஒரீஇ = ஒருவி. (வி. 79.)]

82. உருவிற் கமைந்தான்கண் ஊராண்மை இன்மை
பருகற் கமைந்த பா னீர்அளா யற்றே.
தெரிவுடையார் தீயினத்தர் ஆகுத னாகம்
வரி பெடையோ டாடி விட் டற்று.

A specious outward appearance without a liberal spirit like milk and water.

[எழு: இன்மை, ஆகுதல். பயனி: அளாயற்று, விட்டற்று. அளாய் = அளாவி. அளாய், விட்டு, இவை அளாவினால், விட்டால் என்று பொருள் கொள்ளும். (வி. 117.) பானீர் = பாலிலேநீரை. (வி. 152.)]

XV. பாடம்.

FRIENDSHIP.

நட்பு.

[நட்பின் அருமை.]

83. செயற் கரிய யா உள நட்பின்; அது போல்
வினைக் கரிய யா உள காப்பு?

Nothing harder than to gain a friend. No surer defence.

[நட்பின். (வி. 61. ஒப்பு.) உள. (வி. 125.) யா. (வி. 6.)]

[நல்லோர் நட்பு வளர்தலுந் தீயோர் நட்பு குறைதலும்.]

84. நிறை நீர நீரவர் கேண்மை பிறை; மதிப்
பின்னீர பேதையார் நட்பு.

The friendship of the good increases; and *vice versa.*

[பிறைபோல் அறிவுடையவரது நட்புக்கள் நிறையுந்தன்மையின வாம்; நிறைந்த சந்திரன்போல் பின்னே நாடோறுங் குறையுந் தன் மையுடையனவாம் அறிவில்லாதவரது நட்புக்கள். நீர. (வி. 93.)]

85. நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக் கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

Friendship not for jesting; but for serious reproofs.

[எழு: நட்டல். பயனி: அன்று, பொருட்டு. மிகுதிக்கண். (வி. 63.)]

[நட்பின் இயல்பு.]

86. முக நக நட்பது நட்பன்று; நெஞ்சத்
தக நக நட்பது நட்பு.

Mere complaisance not friendship; but real hearty affection.

[எழு: நட்பது, நட்பது. பயனி: அன்று, நட்பு. நெஞ்சத்து அகம் நக. (வி. 119. 140.)]

[நட்பின் செய்கை.]

87. உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதா' நட்பு.

Friendship saves from distress as the hand keeps up the slipping garments.

[எழு: நட்பு. பயனி: ஆம்.]

[நட்பின் மாட்சிமை.]

88. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில்
கொட்பின்றி ஒல்லும்வாய் ஊன்று' நிலை.

Real friendship an unswerving support.

[எழு: இருக்கை. பயனி: நிலை. நட்பிற்கு. (வி. 65.) இருக்கை. (வி. 94.) எனில். (வி. 86. (2.)) ஊன்றும் நிலை. (வி. 87. (3.))]

XVI. பாடம்.

CAUTION IN FORMING FRIENDSHIPS.

நட்பாராய்தல்.

[உடனே சிநேகம் பண்ணல்ஆகாது; பின்னே சிநேகிதனை விடக் கூடாது.]

89. நாடாது நட்டலிற் கேடில்லை, நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

Rashness in forming connections. Not to be dissolved.

[எழு: கேடு, வீடு. பயனி: இல்லை, இல்லை.)]

[பாத்திரம் அறிந்து செய்யாத நட்பு தீதாய் முடியும்.]

90. ஆய்ந் தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான் சாந் துயரந் தரும்.

Inconsiderate friendship brings ruin.

[எழு: கேண்மை. பயனி: தரும். கொள்ளாதான் = கொள்ளாதவன். சாம் = சாகும். (வி. 82. (7.))]

[வறுமையே சிநேகிதரை அளக்குங் கோல்.]

91. கேட்டினும் உண்டோர் உறுதி,—கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

Misfortune has this use, it is a rod to measure your friends.

[எழு: உறுதி, கேடு (தொகை.) பயனி: உண்டு, கோல் (ஆம்.) கேட்டினும். (வி. 61. 113.)]

[தீயோர் நட்பை விடுவது இலாபம்.]

92. ஊதியம் என்ப தொருவற்குப்
பேதையார் கேண்மை ஒரீஇ விடல்.

Gain to forsake the friendship of the foolish.

[எழு: விடல். பயனி: என்பது. ஒருவற்கு = ஒருவனுக்கு. (வி. 60. 35. 108.)]

[தீயோர் நட்பு.]

93. உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ,
கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

Pure thoughts. Friendship that brings no sorrow.

[எழு: நீ. (தொகை.) பயனி: உள்ளற்க! கொள்ளற்க! உள்ளற்க. (வி. 92.) சிறுகுவ. (வி. 81. 95.)]

[துன்பம் வந்தவேளையில் கைவிடுகிற சிநேகிதர்.]

94. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
அடுங்காலை உள்ளினும் உள்ளஞ் சுடும்.

The thought of faithless friends gives pain even in death.

[எழு: கேண்மை. பயனி: சுடும்.]

XVII. பாடம்.

THE FRIENDSHIP OF THE WICKED.

தீயோர் நட்பு.

[நல்லோர் நேசத்தை நாடலும் அல்லோர் நேசத்தைக் கைவிடலும்.]

95. மருவுக மாசற்றார் கேண்மை, ஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

The friendship of the pure, and of the inconsistent.

[எழு: நீ (தொகை.) பயனி: மருவுக, ஒருவுக. மருவுக. (வி. 85.) ஈத்தும் = ஈந்தும். (வி. 41. (1.) 141.) "*At any sacrifice.*"]

[தீயோர் நேசம் வளர்தலினுங் குறைதல் நன்று.]

96. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

Better that the friendship of those of bad dispositions should decrease than increase.

[எழு: கேண்மை. பயனி: இனிது. போலினும். (வி. 86. 142.)]

[தீயோர் சிநேகத்தில் பயனில்லை.]

97. உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

No benefit in the friendship of those who cling to one in prosperity and forsake one in adversity.

[எழு: பயன் (தொகை.) பயனி: என். உறின் நட்டு, அறின் ஒருவும். (வி. 86. (2) 87.)]

[நயத்தை நாடி நேசிப்போர் கள்வருக்கு ஒப்பு.]

98. உறுவது சீர்தூக்கு நட்பும், பெறுவது
கொள்வாருங், கள்வரு நேர்.

Interested friends and thieves alike.

[எழு: நட்பு, கொள்வார், கள்வர். பயனி: நேர். (வி. 109.) உறுவது = நட்பால் வரும் பிரயோசனத்தை. (வி. 95. 152.)]

[பொய்யான சிநேகிதரினும் பகைவர் நல்லவர்.]

99. நகைவகையர் ஆகிய நட்பிற்

Ten times better enmity than mere sportive friendship.

பகைவராற் பத்தடுத்த கோடி உறும்.

[எழு: கோடி. பயனி: உறும். நகைக்கேதுவாகிய நட்பில் வரும் இன்பங்களில் பகைவரால் வருந் துன்பங்கள் மிக நல்ல. பத்தடுத்த கோடி = பத்தாகத் தொடுத்த கோடி.]

[உதவி செய்யார் கேண்மை.]

100. ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை

Forsake without a word the friendship of those who will not make an effort for you.

சொல்லாடார் சோர விடல்.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: சோரவிடல். உடற்றுபவர். (வி. 95.) சொல்லாடார் = சொல்லாதவராக. விடல். (வி. 85.)]

XVII. பாடம்.

INSINCERE FRIENDSHIP.

உண்மையற்ற நட்பு.

[மன உறுதியற்றவர் நட்பு தீது.]

101. கனவினும் இன்னாது, மன்னோ, வினைவேறு

Avoid the friendship of those whose words and deeds do not agree.

சொல்வேறு பட்டார் தொடர்பு.

[எழு: தொடர்பு. பயனி: இன்னாது. கனவினும். (வி. 63. 113.)]

[உண்மையில்லாத நட்பர் தன்னைக் கெடுத்துவிடுவார்கள்.]

102. சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை

Faithless friends seek to betray.

நேரா நிரந்தவர் நட்பு.

[எழு: நட்பு. பயனி: பட்டடை. நேரா. (வி. 90 = நேராமல்.)]

[தீயோர் நட்பு மாறிப்போகும்.]

103. இனம்போன் றினமல்லார் கேண்மை, மகளிர்
மனம்போல வேறு படும்.

Fickle and feigning friends.

[எழு: கேண்மை. பயனி: வேறுபடும்.]

[கல்வி எளிது; மனத்தூய்மை அரிது.]

104. பல நல்ல கற்றக் கடைத்து மனநல்லர்
ஆகுதன் மாணார்க் கரிது.

Natural enemies will not become one's friends.

[எழு: ஆகுதல். பயனி: அரிது. கடைத்தும்=இடத்தும். (வி.86.142.)]

[தீயோர் வணக்கங் கெடுதல்.]

105. சொல்வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க,
வில்வணக்கந் தீங்கு குறித்தமை யான்.

The bow bends to destroy: beware of feigned courtesy.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: கொள்ளற்க. குறித்தமையான். (வி. 94. 59.)]

XIX. பாடம்.

BENEFITS.

நன்றி.

[நல்லோர்க்குச் செய்த நன்றியின் பயன் பின்னாகவாவது வரும்.]

106. நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல், என வேண்டா:
நின்று
தளரா வளர்தெங்கு தான் உண்ட நீரைத்
தலையாலே தான்றரு தலால்.

Seek not return of benefits.

The cocoanut tree.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: வேண்டா. இது நேரிசைவெண்பா. (வி. 189.) கொல் எ-து அசைநிலை. (வி. 116.) தளரா = தளராமல். (வி. 90.) வளர். (வி. 153.)]

[நல்லோருக்குச் செய்த நன்றி நிலைநிற்கும்.]

107. நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கன்மேல் எழுத்துப் போற் காணுமே,
அல்லாத
ஈரம் இல்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

Benefits conferred on the good, like engraving on stone; on others, writing on water.

[எழு: உபகாரம். பயனி: காணும், நேர் (ஆகும்.) கல் + மேல் = கன்மேல். (வி. 36.) எழுத்திற்கு = எழுத்து இன் + கு. (வி. 65.) நெஞ்சத்தார். (வி.66.93.123.) அல்லாத = ஒழிந்த. மற்றைய. (வி. 125.) நீர்மேல். (வி.63.) நேர். (வி. 131.)]

[தீயோருக்கு உபகாரஞ் செய்பவன் கெடுவான்; அவ்வுபகாரமுங் கெடும்.]

108. வேங்கை வரிப் புலிக்குத் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற் போற்,
பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரங்
கல்லின்மேல் இட்ட கலம்.

The tiger that slew the physician.

[எழு: உபகாரம். பயனி: கலம். அதனுக்கு = அது + அன் + கு. (வி. 108.) வரி = வரிகளையுடைய. (வி. 154.) தீர்த்த = (நோயைத்)தீர்த்த. ஆனாற்போல். (வி. 109.) அறியா. (வி. 91.) கலம் = கலத்தைப்போல் ஆகும். (வி. 155. 131.)]

[உபகாரஞ் செய்யாதவர் செல்வம் உபகாரஞ் செய்பவருக்கு ஆகும்.]

109. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறும்;
பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

The wealth of the ungenerous is taken from them; the cloud takes from the sea to give to others.

[எழு: செல்வம், புயல். பயனி: ஆம், கொடுக்கும். பெய்யா. (வி. 86. (1.)) செய்யார், ஆக்குபவர், கடல், நீர். (வேற்றுமைத்தொகை. வி. 152.)

பெய்யா=பெய்து. (வி. 86. (1.)) பேறு. (வி. 96.) சென்று புயல் முகந்து பெய்யாக்கொடுக்கும் = புயலானது சென்று, மொண்டுகொண்டு பெய்து கொடுக்கும்.]

[நல்லோர் பிறர் துயரத்தைத் தமதாக எண்ணுவார்கள்.]

110. பேர்அறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே,
வீரமொடு காக்க விரைகுவார்;
நேர்இழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது.

The wise relieve the sorrows of their neighbours. The hand wards off the blow aimed at the body.

[எழு: அறிஞர், கை. பயனி: விரைகுவார், தாங்கும். வீரமொடு. (வி. 66. 27.) விரைகுவார். (வி. 81.) பேர். (வி. 121.) இழாய், இழைகளையுடையவளே! (வி. 64. 93.) அறிஞர். (வி. 95.) வீரமொடு. (வி. 66.) கோல் அடிதன்மேற்கைசென்று தாங்கும் = கையானது சென்று கோலினுடைய அடியைத் தன்மேல் படும்படியாகத் தாங்கிக்கொள்ளும்.]

XX. பாடம்.

GRATITUDE.

செய் நன்றி அறிதல்.

[நல்லோர் தமக்குச் செய்த உபகாரத்தை மதிப்பது.]

111. தினைஅனைத்தே ஆயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனைஅனைத்தா உள்ளுவர் சான்றோர்;
பனைஅனைத்
தென்றுஞ் செயினும், இலங்கருவி நன்னாட!
நன்றில நன்றறியார் மாட்டு.

Small benefits seem great to the wise; and vice versa.

[எழு: சான்றோர், நன்று. பயனி: உள்ளுவர், இல. இலங்கு, அருவி, நல், நாட. (வி. 153. 4. 7. 93. 64.) மாட்டு. (வி. 63.)]

[நல்லோர் தமக்குச் செய்த நன்மையை நினைப்பது; தீயோர் தம்மை நிந்தித்ததை நினைப்பது.]

112. மலைநலம் உள்ளுங் குறவன்; பயந்த
விளைநிலம் உள்ளும் உழவன்; சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர்; கயந்தன்னை
வைததை உள்ளி விடும்.

Each thinks upon his own favorite place. The good upon benefits conferred on them ; the bad on injuries.

[எழு: குறவன், உழவன், சான்றோர், கயம். பயனி: உள்ளும், உள்ளுவர், உள்ளி விடும். உள்ளும். (வி. 137.) கயம் = கயவன். (வி. 162.) விடும். (வி. 124. (5.))]

[சான்றோரும் இழிவோரும் உபகாரத்தையும் அபகாரத்தையும் மதிப்பது.]

113. ஒருநன்றி செய்தவர்க் கொன்றி எழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்; கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்,
எழுநூறுந் தீதாய் விடும்.

One benefit atones for a hundred injuries. The base forget seven hundred benefits when one injury is inflicted.

எழு: சான்றோர், எழுநூறு. பயனி: பொறுப்பர், விடும். தீதாய். (வி. 120.)]

[நன்றி அறிபவர்க்காகிய இலாபம்.]

114. நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்றும் உறுதியே சூழ்க; எறிதிரை
சென்றுலாஞ் சேர்ப்ப! அதுபோல நீர்போயும்
ஒன்றிரண்டாம் வாணிகம் இல்.

Slight benefits had in eternal remembrance. No merchandise like this!

[எழு: அறிபவர், வாணிகம். பயனி: சூழ்க, இல். சூழ்க. (வி. 85.) உலாம். (வி. 87. (3.)) போயும். (வி. 141. 86. (1.))]

[நன்றி அறியாதவர்க்கு உறுந்தீமை.]

115. நாடி நமர் என்று நன்கு புறந் தந்தார்க்குக்
கேடு பிறரோடு சூழல்,—கிளர் மணி
நீடு கல் வெற்ப! நினைப்பின்றித் தாம் இருந்த
கோடு குறைத்து விடல்.

Ingratitude and treachery like cutting off the bough on which one stands.

[எழு: சூழல். பயனி: விடல். நன்கு. (வி. 120.) புறந்தந்தார்கு. (வி. 150.)]

XXI. பாடம்.

GRATITUDE.

செய் நன்றி அறிதல்.

[செய் நன்றியின் பெருமை.]

116. செய்யாமற் செய்த உதவிக்கு
வையகமும் வானகமு மாற்றல் அரிது.

Spontaneous benefits.

[எழு: மாற்றல். பயனி: அரிது. வையகம், வானகம். (வி. 150.) அரிது. (வி. 93. அரு.)]

[ஏற்ற காலத்திற் செய்த நன்றி.]

117. காலத்தி னாற் செய்த நன்றி, சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

Timely benefits.

[எழு: நன்றி. பயனி: பெரிது. காலத்தினால். (வி. 137.) சிறிது, பெரிது. (வி. 93. சிறு, பெரு.) மாண. (வி. 120.) எனினும். (வி.142.)]

[பயன் நாடாமற் செய்த நன்றி.]

118. பயன்றூக்கார் செய்த உதவி,
நயன் றூக்கி னன்மை கடலிற் பெரிது.

Disinterested benefits.

[எழு: நன்மை. பயனி: பெரிது. பயன்றூக்கார். (வி. 38. 152.)]

[நல்லோர் நன்றியை மதித்தல்.]

119. தினைத்துணை நன்றி செயினும்,
பனைத்துணையாக் கொள்வர் பயன்றெரிவார்,

Small benefits estimated as large ones.

[எழு: பயன்றெரிவார். பயனி: கொள்வர். தினைத்துணை நன்றி. (வி. 162. 154.)]

[நன்றி செய்யப்பட்டவரால் அடையும் மேன்மை.]

120. உதவி வரைத்தன் றுதவி
உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து.

Benefits conferred on the worthy take their value accordingly.

[எழு: உதவி. பயனி: வரைத்து. வரைத்து. (வி. 93.)]

[வறுமையில் உதவியவர் நட்பு மறக்கப்படாமை.]

121. மறவற்க மாசற்றார் கேண்மை!
துறவற்க துன்பத்துட் டுப்பாயார் நட்பு!

Forget not the kindness of the pure! Forsake not the friendship of those who have befriended you in trouble!

[எழு: நீ (தொகை.) பயனி: மறவற்க! துறவற்க! மறவற்க, துறவற்க. (வி. 92.) துன்பத்துட்டுப்பாயார். (வி. 63. 66. 37.) துப்பாயார் = துப்பு ஆனவர்கள். (வி. 87. (1.) 95.)]

[மறவாதது இது; மறப்பது இது.]

122. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

Never forget benefits.
Forget injuries at once.

[எழு: மறப்பது. பயனி: அன்று, நன்று. செயப்படு: நன்றியை, நன்றல்லதை. நன்றி. (வி. 96.)]

XXII பாடம்.

THE WISE.

அறிவுடையோர்.

[அறிவோர் வெட்டப்படும் மரத்திற்கு ஒப்பர்.]

123. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாம் அவனை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்; மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர் நிழலைத் தந்து
மறைக்கும் ஆங், கண்டீர், மரம்.

The tree still shelters those who are cutting it down. The wise forgive and do good to those who inflict the cruelest iujuries.

[எழு: அறிவுடையோர், மரம். பயனி: காப்பர், மறைக்கும். சாம் = சாகும். (வி. 87.) ஆம் = ஆகும். இடைக்குறை. (வி. 87. 41.) இடினும். (வி. 124. (5.) 142.)]

[தம்மைப் புகழாதவர்க்கு உதவி செய்வது.]

124. என்று முகமன் இயம்பா தவர் கண்ணுஞ்
சென்று, பொருள் கொடுப்பார் தீதற்றோர்; துன்று சுவை,—
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழ்வோ,
நாவிற் குதவு நயந்து?

The good confer benefits on those who do not continually flatter them. Does the hand serve the tongue for praise?

[எழு: தீதற்றோர், பூங்கை. பயனி: கொடுப்பார், உதவும். கண்ணும். (வி. 63. 113.) பூங்கை (பூ + கை.) (வி. 41. 121.) புகழ்வோ. (வி.140. 112.)]

[நல்லோர் பிரகாசிக்குந் திங்களுக்கு ஒப்பர்.]

125. தங்குறைதீர் வுள்ளார், தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க் கிற்பார் விழுமியோர்;
திங்கள்
கறை இருளை நீக்கக் கருதா துலகின்
நிறை இருளை நீக்குமே னின்று.

The good forget their own while they seek to alleviate others' sorrows. The moon does not remove its own spots.

[எழு: விழுமியோர், திங்கள். பயனி: தீர்க்கிற்பார், நீக்கும். தீர்வு. (வி. 94.) உறூஉம். (வி. 40.) தீர்க்கிற்பார் = தீர்ப்பார். (வி. 108.) உலகி னிறை. (வி. 40.) மேனின்று. (வி. 39.)]

[வறுமையை நீக்குவர் நல்லோர்.]

126. தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார், தமை அடைந்தோர்
தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர்; அல்கு
கழியினுஞ் செல் லாதோ கடல்?

The good do not overestimate themselves and their position; but seek to serve those below them. The sea pours its waters even into the little creek.

[எழு: உயர்ந்தோர், செல்வர், கடல். பயனி: மதியார், தீர்ப்பர், செல் லாதோ. தங்கடலைமையும் = தங்களுடைய தலைமையையும். (வி. 37.) தமை = தம்மை. (வி. 41.)]

[நல்லோர் தமக்கென்று பொருள் பேணாமை.]

127. எள்ளா திருப்ப இழிஞர் போற் றற்குரியர்;
விள்ளா அறிஞர் அது வேண்டாரே;
தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டு குளம், அன்றிக்
கரைகாப் புளதோ கடல்?

The mean always vindicate their own reputation. Not so the wise. The tank needs a firm bank; not so the sea.

[எழு: இழிஞர், அறிஞர், குளம், கடல். பயனி: உரியர், வேண்டார். உளது, உளதோ. இருப்ப. (வி. 86.) கட்டு. (வி. 153.) கரை காப்பு. (வி. 154.) உளது. (வி. 41. 125.) விள்ளா, தள்ளா. (வி. 91.) போற்றற் குரியர் = போற்றுவதற்கு மிகவுங் கவலைப்படுவோர்கள்.]

XXIII பாடம்.

GREATNESS.

பெருமை.

[பெருமை வரும் வகை.]

By BIRTH equal. By deeds unequal.

128. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்;
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.

[எழு: பிறப்பு, சிறப்பு. பயனி: ஒக்கும், ஒவ்வா. ஒக்கும், ஒவ்வா. (வி. 125.)]

[பெருமையின் இயல்பு.]

The base not made great by being exalted; and vice versa.

129. மேல் இருந்தும் மேல் அல்லார் மேல் அல்லர்; கீழ் இருந்துங்
கீழ் அல்லார் கீழ் அல் லவர்.

[எழு: மேலல்லார், கீழல்லார். பயனி: அல்லர், அல்லவர்.]

[பெருமையுடையவருக்கு உரிய செயல்.]

The great will do great actions.

130. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

[எழு: உடையவர். பயனி: ஆற்றுவார். செயல். (வி. 152) = செயல்களை.]

[சிறியார் பெரியோரை இகழ்தல்.]

The mean do not cultivate and imitate the great.

131. சிறியார் உணர்ச்சியுள் இல்லைப்
பெரியாரைப் பேணிக்கொள் வேம் என்னு' நோக்கு.

[எழு: நோக்கு. பயனி: இல்லை. கொள்வேம். (வி. 77. 83.)]

[பெருமைக்குஞ் சிறுமைக்கும் உற்ற விகற்பம்.]

132. பணியும் ஆம் என்றும் பெருமை; சிறுமை
அணியும் ஆந் தன்னை வியந்து.

Greatness submits. Littleness exalts itself.

[எழு: பெருமை, சிறுமை. பயனி: பணியும், அணியும். ஆம் இரண்டும் அசை நிலைகள். (வி. 116.) பெருமை, சிறுமை. (வி. 162. (5.)]

[இதுவும் அது.]

133. பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

Greatness is freedom from vanity; and vice versa.

[எழு: பெருமை, சிறுமை. பயனி: இன்மை, விடல்.]

XXIV பாடம்.

INSTABILITY OF WORLDLY GOOD.

செல்வ நிலையாமை.

[செல்வ நிலையாமைக்கு உதாரணம்.]

134. அறு சுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறு சிகை நீக்கி உண் டாரும்
வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ் எனிற் செல்வம் ஒன்
றுண்டாக வைக்கற் பாற் றன்று.

To-day he dines luxuriously. To-morrow he begs. Is wealth any thing?

[எழு: செல்வம். பயனி: அன்று. அறு. (வி. 159.) வறிஞர் = வறி-ஞ்-அர். ஞகரம் இடைநிலை. (வி. 93. வறு.) இடத்து. (வி. 63.) பாற்று = பாலையுடையது. (வி. 93. பால் + து.)]

[செல்வம் சகடக்காலுக்கு ஒப்பிடல்.]

135. துகடீர் பெருஞ் செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்த கூழ் பல்லாரோ டுண்க;
அகடுற யார் மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

Feast with many guests! Prosperity like a cart wheel.

[எழு: ஒருவன் (தொகை), செல்வம். பயனி: உண்க, வரும். யார் மாட்டும். (வி. 63.) துகள், தீர். (வி. 37. 153.)]

[செல்வம் நில்லாதென்று அறிந்து அறஞ் செய்வது.]

136. நின்றன நின்றன நில்லா என உணர்ந்
தொன்றின ஒன்றின வல்லே செயிற் செய்க;
சென்றன சென்றன வாழ்நாள், செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

Do your duty, knowing the instability of all things. Time flies! Death comes!

[எழு: ஒருவர் (தொகை), வாழ்நாள், கூற்று. பயனி: செய்க, சென்றன, வந்தது.

[செல்வம் இறந்தபின் உதவாது.]

137. இழைத்த நாள், எல்லை இகவா, பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தார் ஈங்கில்லை;
ஆற்றப்
பெரும் பொருள் வைத்தீர், வழங்குமி னாளைத்
தழீஇந் தழீஇந் தண்ணம் படும்.

Death certain. No escape. Spend your wealth and not hoard it. The death-drum will sound to-morrow.

[ஒரீஇ. (வி. 79.) இகவா. (வி. 86. (1.)) வைத்தீர் = வைத்தவர்களே. (வி. 95.)]

[செல்வத்தை மின்னுக்கு ஒப்பிடல்.]

138. "செல்வர் யாம்" என்று தாஞ் செல்வுழி எண்ணாத
புல் லறி வாளர் பெருஞ் செல்வம்
எல்லிற்
கருங் கொண்மூ வாய் திறந்த மின்னுப் போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

Wealth like the lightning in a black cloud.

[எழு: செல்வம். பயனி: விடும். செல்வுழி. (செல், வ், உழி. (வி. 63. 153.) புல். (வி. 119.)]

[உலோபியினுடைய செல்வங் கெடுதல்.]

139. உண்ணான், ஒளி நிறான், ஓங்கு புகழ் செய்யான்,
துன்னருங் கேளிர் துயர் களையான்,
கொன்னே
வழங்கான், பொருள் காத் திருப்பான் ஏல், அ ஆ!
இழந்தான் என் றெண்ணப் படும்.

The wealth of the man who renders no assistance to others will perish.

[எழு: அவன் (தொகை.) பயனி: படும். உண்ணான். (வி. 89.) புகழ். (வி. 162. காரிய ஆகுபெயர்.) துன், அருங்கேளிர். (வி. 153. 121.)]

XXV பாடம்.

INSTABILITY OF PROSPERITY.

நிலையாமை.

[வழங்காதாரைத் தேனீக்கு ஒப்பிடல்.]

140. உடாஅதும் உண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்,
கொடாஅது
வைத்தீட்டி னார் இழப்பர்;—வான் றோய் மலை நாட!
உய்த் தீட்டுந் தேனீக் கரி.

The wealth of the miser will be forfeited. The honey-bee.

[எழு: ஈட்டினார், தேனீ. பயனி: இழப்பர், கரி. தேனீ. (வி. 152.)]

[வாலிபம் நிலையாமை.]

141. நரை வரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி இடத்தே துறந்தார்;
புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல் ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்.

The wise anticipating grey hairs practice virtue from their youth. Others find old age a burden.

[எழு: அறிவாளர், மகிழ்ந்தாரே. பயனி: துறந்தார், இருப்பார். தீரா, மன்னா. (வி. 91.)]

[நிலையாத பொருள்மீது அறிஞர் மகிழாமை.]

142. வெறிஅயர் வெங்களத்து, வேன்மகன் பாணி
முறிஆர் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
அறிவுடை யாளர்கண் இல்.

The sheep led to slaughter with gay garlands. Foolish levity.

[எழு: மகிழ்ச்சி. பயனி: இல்.]

[தேகம் நிலையாமை.]

143. பருவம் எனைத்துள? பல்லின்பால் ஏனை?
இருசிகையும் உண்டீரோ? என்று,
வரிசையால்
உண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்
எண்ணார் அறிவுடையார்.

The body, concerning which such inquiries are made, is not relied on by the wise.

[எழு: அறிவுடையார். பயனி: எண்ணார்.]

[நிலையாமை காரணமாய் அறன்வலி உறுத்தல்.]

144. "மற்றறிவா' நல்வினை, யாம் இளையம்," என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்;—
முற்றி இருந்த கனி ஒழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு.

Don't rely on your youth and procrastinate. The green fruit falls as well as the ripe when the tempest blows.

[எழு: நீர் (தொகை), உதிர்தல். பயனி: செய்ம்மின், உண்டு. இளையம். (வி. 93.)]

[மரணம் வரும் என்றறிந்து அறஞ் செய்க.]

145. ஆட்பார்த் துழலும் அருளில் கூற் றுண்மையால்,
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்;
பீட் பிதுக்கிப்
பிள்ளையைத் தாய் அலறக் கோடலான், மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

Death wanders about taking old and young. Perform virtuous acts betimes.

[எழு: நீர் (தொகை), பிடித்தல். பயனி: உய்ம்மின், நன்று.]

XXVI பாடம்.

INSTABILITY (OF WORDLY THINGS.)

நிலையாமை.

[பிரபஞ்ச நிலையாமை.]

146. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

Foolishness to call unstable things stable.

[எழு: புல்லறிவாண்மை. பயனி: கடை. நில்லாதவற்றை. (வி. 95.) நிலையின. (வி. 93.)]

[செல்வம் நாடக சபைக்கு ஒப்பெனல்.]

147. கூத்தாட் டவைக் குழாத் தற்றே, பெருஞ் செல்வம்
போக்கும் அது விளிந் தற்று.

Prosperity like an assembly. Its loss like the dispersion of the crowd.

[எழு: செல்வம், போக்கும். பயனி: அற்றே, அற்று. பெருஞ்செல்வம் (வருதல்) கூத்தாடுதல் செய்கின்ற சபையினிடத்தே கூட்டம் வருதல் போலும். குழாத்தற்றே [குழாம், அத்து, அற்றே.] (வி. 66. 109.)]

[ஒவ்வொரு நாளும் ஆயுளைக் குறுக்கும்.]

148. நாள் என ஒன்று போற் காட்டி, உயிர் ஈரும்
வாள துணர்வார்ப் பெறின்.

What is called a "day" is a saw to cut human life.

[எழு: நாள். பயனி: வாளது.]

[மரணம் வரு முன்னே அறஞ் செய்க.]

149. நாச் செற்று விக்குள் மேல் வாரா மு ன்னல்வினை
மேற் சென்று செய்யப் படும்.

Before the tongue dries up and the death-rattle is heard, do virtuous deeds.

[எழு: நல்வினை. பயனி: செய்யப்படும்.]

[உலகத்தின் பெருமை நிலையாது.]

150. நெருநல் உளன் ஒருவன், இன்றில்லை, என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

Here to-day, gone to-morrow!

[எழு: உலகு. பயனி: உடைத்து.]

[நிலையாத மாந்தரின் பேதைமை.]

151. ஒரு பொழுதும் வாழ்வ தறியார்;
கருதுப கோடியும் அல்ல பல.

Not certain of a day. They meditate a million things.

[எழு: மனிதர் (தொகை.) பயனி: அறியார். கருதுப. கோடி அளவும் அன்றி அதனிலும் பலவற்றை. கருதுப. (வி. 81.)]

[உயிர் உடம்பை விடுதல்.]

152. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு.

As the bird leaves the shell so the soul the body.

[எழு: நட்பு. பயனி: அற்றே. புள். (வி. 34.) உயிரிடை. (வி. 63.)]

[உயிர் வாழ்க்கை இரவற் குடி எனல்.]

153. புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுட் டுச்சில் இருந்த உயிர்க்கு?

No settled home yet found for the spirit; so it dwells in the body as in a lodging.

[எழு: புக்கில். பயனி: இன்றுகொல்லோ. புக்கில் அமைந்தின்று கொல்லோ = என்றும் உள்ள வீடு இல்லையோ?]

XXVII பாடம்.

INSTABILITY OF THE BODY.

சரீர நிலையாமை.

[நிலையாமையை நல்லோர் மதிப்பது.]

154. எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழு மலி நோய்ப் புன் குரம்பை;
நல்லார்
அறிந்திருப்பார், ஆதலினால் ஆங் கமல நீர் போற்
பிறிந்திருப்பார், பேசார் பிறர்க்கு.

The body justly estimated by the wise.

[எழு: உடம்பு, நல்லார். பயனி: குரம்பை, இருப்பார், பேசார். புழு மலி நோய் புன் குரம்பை. (வி. 157. 153.)]

[வயிற்றின் வாழ்க்கை.]

155. "ஒருநாள் உணவை ஒழி" என்றால் ஒழியாய்;
"இருநாளைக் கேல்" என்றால் ஏலாய்;
ஒருநாளும்
என்னோ வறியாய்; இடும்பைகூர் என் வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது.

The stomach requires daily food.

[எழு: வாழ்தல். பயனி: அரிது. கூர். (வி. 153.)]

[நிலையாமையைத் தீயோர் எண்ணாமை.]

156. இற்சார்வின் ஏமாந்தேம், ஈங்கமைந்தேம், என்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையார்;
அச்சார்வு
நின்றன போன்று நிலையா என உணர்ந்தார்
என்றும் பரிவதிலர்.

The foolish make themselves at home. The wise know it is a vain show.

[எழு: பேதையார், உணர்ந்தார். பயனி: ஒழுகுவர். இலர். பரிவதிலர். (வி. 95. 125. பரிவது + இலர்.)]

[நிலையாமைக்கு உதாரணம்.]

157. மலைமிசைத் தோன்று மதியம் போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்
நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டார், அல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்.

The most exalted die. None escape.

[எழு: குடையர், எஞ்சினார். பயனி: பட்டார், இல். மலைமிசை. (வி. 63.) குடையர். (வி. 93.)]

[நிலையாமை காரணமாக அறன்வலி உறுத்தல்.]

158. வாழ்நாட் கல காய் வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்,
வாழ்நாள்
உலவாமுன் ஒப்புர வாற்றுமின், யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

The sun rises daily, measuring off our days. Do virtuous deeds. None remain on the earth !

[எழு: நீர் (தொகை), யாரும். பயனி: ஆற்றுமின், நிலவார். நாட்கு = நாளுக்கு. வயங்கொளி. (வயங்கு, ஒளி.) வி. 153. நிலவார் = நிலையார். (இதில் நிலை என்னும் பகுதிக்குப்பதிலாக நில என்பது வந்தது.)]

[நிலையாமைக்குச் சிறந்த உதாரணம்.]

159. மன்றங் கறங்க மணப்பறை ஆயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்
பின்றை
ஒலித்தலும் உண்டாம் என் றுய்ந்து போம் ஆறே
வலிக்குமா மாண்டார் மனம்.

The wedding drum sounds that very day for the dead. The excellent seek for the way of deliverance.

[எழு: மனம். பயனி: வலிக்கும். செயப்படு: ஆற்றை. ஆம், அசைநிலை.]

XXVIII பாடம்.

INSTABILITY.

நிலையாமை.

[சரீர நிலையாமைக்கு உதாரணம்.]

160. சென்றே எறிப ஒருகால்; சிறுவரை
நின்றே எறிப பறையினை;
நன்றே காண்!
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

Those who shall die bear the dead.

[எழு: அவர் (தொகை), சாவார். பயனி: எறிப, எழுவர். எறிப. (வி. 83.) பறையினை. (வி. 65.) கொட்டினுள். (வி. 63.)]

[இதுவும் அது.]

161. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்,
மணங்கொண்டீண்
டுண்டுண் டுண் டென்னும் உணர்வினாற், சாற்றுமே
தொண் டொண் டொ டென்னும் பறை.

Though men see the procession to the burning ground, they think domestic happiness is real. The drum tells them the truth.

[எழு: பறை. பயனி: சாற்றும். உணர்வினன் = புல்லறிவாளனுக்கு. (வி. 152.) தொண்டொண்டொடு என்பன ஒலிக்குறிப்பாகிய அடுக்கு மொழிகள்.)]

[சரீர நிலையாமை காரணமாக அறன்வலி உறுத்தல்.]

162. புன்னுனி மே னீர் போ னிலையாமை என்றெண்ணி,
இன்னினியே செய்க அறவினை!
இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்றன் கேள் அலறச்
சென்றான் எனப்படு தலான்.

Now do virtuous deeds; for he, who but now was, has fallen and passed away from amidst his weeping friends.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: செய்க. செயப்படு: அறவினையை. புன்னுனிமேனீர் போனிலையாமை = புல் நுனி மேல் நீர் போல் நிலையாமை. (வி. 39.) எனப்படுதலான். (வி. 124. (1.))]

[தேகத்தைப் பறவைக் கூட்டுக்கு ஒப்பிடல்.]

163. கேளாதே வந்து, கிளைகளாய் இற் றோன்றி,
வாளாதே போவரால், மாந்தர்கள்
வாளாதே
சேக்கை மரன் ஒழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

Like birds that leave the tree where their nest was, man leaves his body.

[எழு: மாந்தர்கள். பயனி: போவர். இற்றோன்றி = வீட்டில் தோன்றி. (வி. 152. 38.) மரன் = மரம். (வி. 17.) 152 பாட்டையுங் காண்க.]

[தேக நிலையாமை காரணமாக அறன்வலி உறுத்தல்.]

164. கொள்ளுங் கொடுங் கூற்றங் கொல்வான் குறுகுதன் முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே!
வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார்? பேசு!

Perform virtuous actions before death comes. Before the torrent comes if the dam has not been constructed what can be done after?

[எழு: நீவிர் (தொகை), வையார். பயனி: உய்க, செய்வார். கொடும். (வி. 121.) கொல்வான் = கொல்லும் பொருட்டு, இது எதிர்காலத்து வினையெச்சம். (வி. 86.) குறுகுதல், பெருகுதல். (வி. 94. 63.) உய்க. (வி. 85.)]

[சாகும் வேளை நிச்சயமில்லாமையால் தாமதமின்றி அறஞ் செய்க.]

165. இளையம், முது தவம் ஆற்றுது' நோற்றென்
றிளைவின்று கண்பாடும் ஊழே,
விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேல்; காண்பாருந்
தாழாமே நோற்பார் தவம்.

If one knew that he had so long to live, procrastination might be right. Those who rightly number their days delay not.

[எழு: கண்பாடு, காண்பார். பயனி: ஊழ(ரும்), நோற்பார், இளையம். (வி. 93.) முது = முதுமையிலே ஆற்றுதும் நோற்று = நோற்று ஆற்றுதும். (வி. 83. 77.) தாழாமே = தாழாமல். 144 பாட்டையுங் காண்க. இன்று = இன்றி.]

XXIX பாடம்.

THE BODY.

உடம்பு.

[உடம்பின் மேன்மை.]

166. மாக்கேழ் மட நல்லாய் என்ற'ரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ' லொய்'யதோர் புக்கிலே?
யாக்கைக்கோர்
ஈச் சிறகன்'னதோர்' தோல் அறினும், வேண்டுமே
காக்கை கடிவ'தோர் கோல்.

So frail is the body! Do not those who laud the beauty of women regard this?

[எழு: சான்றவர், கோல். பயனி: நோக்கார் கொல், வேண்டும். செயப்படு: புக்கிலே. ஈச்சிறகன்ன = ஈயினது சிறகு போன்றது. கொல் = ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். (வி. 116.) கடிவது = ஓட்டுவதற்கு.]

[உடம்பின் தளர்ச்சி.]

167. கொன்னே கழிந்தன் றிளமையும், இன்னே
பிணியொடு மூப்பும் வரும்ஆல்,
துணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே! போதியோ
நன்னெறி சேர நமக்கு?

Youth passed away in vain. Disease and old age will come! Unreflecting soul, why not seek the way of peace?

[எழு: நீ. பயனி: போதியோ. போதியோ. (வி. 83.)]

[தேகம் அழிந்தாலும் பாவஞ் செய்யற்க.]

168. தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க; தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க;
வான் கவிந்த
வையகம் எல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்!

Never desire evil, nor eat with improper persons, nor lie even to gain the whole world.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: எண்ணற்க, உண்ணற்க, உரையற்க. செயப்படு: கேட்டை, கைத்தை, சொல்லை.]

[காலையே அறத்தைச் செய்க.]

169. காலைச்செய் வோம் என் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்;
மாலை
கிடந்தான் எழுதல் அரிதான்; மற் றென் கொல்,
அறங் காலைச் செய்யாத ஆறு?

In the morning (of life) practise virtue!

[எழு: செய்வாரே, ஆறு. பயனி: தலைப்படுவார், என். காலை=காலையிலே. (வி. 152.)]

[நாள் கழிவு காரணமாக அறன்வலி உறுத்தல்.]

170. சென்றநாள் எல்லாஞ் சிறுவிரல் வைத் தெண்ணலாம்;
நின்றநாள் யார்க்கும் உணர்வரி
தென் றொருவன்
நன்மை புரியாது நாள் உலப்ப 'விட் டிருக்கும்
புன்மை பெரிது, புறம்.

Past days how few! Time to come how uncertain! Why kill one's time!

[எழு: புன்மை. பயனி: பெரிது. எண்ணலாம். (வி. 124. (4.)) புறம், அதிலும் பெரிதொன்றும் இல்லை.]

[அறத்தைப் பூரணமாகச் செய்தல்.]

171. பட்ட வகையாற் பலரும் வருந்தாமற்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்;—
முட்டுடைத் தாக இடை தவிர்ந்து வீழ்தலில்
நட்டறான் ஆதலே நன்று.

Do well what you have determined. To do imperfectly is worse than planting and not reaping.

[நல்லறம் = நல்லறத்தைச் செய்வாயாக. நட்டறான் = பயிரை நட்டு அதன் பலனை அறாதவன்.)]

XXX பாடம்.

INSTABILITY (OF WORLDLY THINGS.)

நிலையாமை.

[முன்னோர் எங்கே? பொருள் என்ன?]

172. இன்றி அமையா இருமுது மக்களும்
பொன்றினமை கண்டும் பொருள்பொருளாக் கொள்பவோ?
ஒன்றும் வகையான் அறஞ்செய்க, ஊர்ந்துருளிற்
குன்று வழிதடுப்ப தில்.

Where are our ancestors? Is worldly good any thing? Can you stay the rolling mountain?

[எழு: ஒருவர், நீ (தொகை), தடுப்பது. பயனி: கொள்பவோ, செய்க, இல். கொள்பவோ. (வி. 83. 112.)]

[சாவுவேளை வரு முன் நல்வினை செய்க.]

173. மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
Before death do good. No time after. ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழி நினைந்து,
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை,
நாய்காணிற் கற்காணு ஆறு.

[எழு: காணுமை. பயனி: ஆறு. காணுமை, அவ்வழியைக் காணும விருக்குந் தன்மையானது.)]

[இறந்தபின் செல்வம் உதவாது.]

174. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடு கெட்ட மானிடரே, கேளுங்கள்!
Who will enjoy the wealth you have stored up? கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்,
பாவிகாள்! அந்தப் பணம்?

[எழு: நீர், யாரே. பயனி: கேளுங்கள், அனுபவிப்பார். செயப்படு: பணத்தை. யாரே. (வி. 111. (6.)) பாவிகாள். (வி. 64.) போயின = போன. (வி. 82.)]

[செல்வநிலையாமை காரணமாக அறன்வலி உறுத்தல்.]

175. ஆறிடு' மேடு' மடுவும்போல் ஆஞ்செல்வம்,
Wealth comes and goes. Be charitable. That only will prevail. மாறிடும், ஏறிடும்; மாநிலத்தீர்!
சோறிடுந்,
தண்ணீரும் வாரும்; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

[எழு: செல்வம், நீர் (தொகை), உண்ணீர்மை. பயனி: ஆம், மாறிடும், ஏறிடும், சோறிடும், வாரும், வீறும்.)]

[திருத்தி அடையாத மனது வாழ்வதரிது.]

176. பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்கம் அரிதம்மா!

Happiness hard to obtain by the mind never satisfied. The fire must die when the fuel is consumed.

முற்றும்
வரவர வாய்மடுத்து, வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா.

[எழு: ஆக்கம், தழல். பயனி: அரிது, இரா. பெற்ற = பெற்றவை களை. பெறாத = பெறாதவைகளை. (வி. 95. 152.) சிறுக, பெரிது = சிறிய வைகள் என்றும், பெரியவைகள் என்றும். சிற்றுயிர்க்கு. (வி. 121.)]

[இயாதார் செல்வத்தினுந் தரித்திரம் நல்லது.]

177. வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு' நனிநல்ல, கொன்னே,
"அருளிலன்," "அன்பிலன்," "கண்ணறையன்" என்று
பலரால் இகழப் படான்.

Better poverty than the riches of the miser. The poor man at least escapes reproaches.

[எழு: நல்குரவு, இவன் (தொகை.) பயனி: நல்ல, இகழப்படான். மற்றவன் இகழப்படுவான். நன். 399. வள்ளன்மை = ஈகைத்தன்மை. (வி. 94.)]

XXXI பாடம்.

COVETOUSNESS.

வெஃகாமை.

[வெஃகுதலினால் ஆய தீமை.]

178. நடுவின்றி நன்பொருள் வெஃகிற்,
குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்.

Covetousness ruins the race.

[எழு: வெஃகுதல் (தொகை.) பயனி: தரும். செயப்படு: குற்றத் தை.]

[நல்லோர் வெஃகார்.]

179. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

Those who dread shame do not dishonorable things through covetousness.

[எழு: நாணுபவர். பயனி: செய்யார். படு. (வி. 153.) அன்மை= அல் + மை. (வி. 94.)]

[பேரின்பமடைதற்கு விடுவதிது.]

180. சிற்றின்பம் வெஃகி, அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

They who desire eternal pleasures do not commit sin thro' love of earthly pleasure.

[எழு: வேண்டுபவர். பயனி: செய்யாரே.]

[வறுமையினுல் வெஃகுதல் ஆகாது.]

181. இலமென்று வெஃகுதல் செய்யார்,
புலம்வென்ற புன்மையில் காட்சி யவர்.

They who have overcome their senses do not covet through poverty.

[எழு: காட்சியவர். பயனி: செய்யார். காட்சியவர். (வி. 93.) இலம். (வி. 93. 125.)]

[அறிவுக்குப் பயன் இவை.]

182. அஃகி அகன்ற அறிவென்னும், யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்?

What avails knowledge if covetousness prevails?

[எழு: அறிவு. பயனி: என்னும்?]

[பிறர் பொருளை விரும்புதலின் குற்றம்.]

183. வேண்டற்க வெஃகி ஆம் ஆக்கம்; விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

Covet not. The fruits are rarely good.

[எழு: நீ, பயன். பயனி: வேண்டற்க, அரிதாம். விளைவயின். (வி. 153.) வேண்டற்க. (வி. 92.)]

XXXII பாடம்.

EVIL DESIRES.

ஆசையறுத்தல்.

[ஆசையின்மையின் பயனும் அது வரும் வழியும்.]

184. தூஉய்மை என்ப தவாவின்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

This is purity. It comes from truth.

[வேண்ட. (வி. 140.) (4.)]

[பாவமில்லாதவர் இன்னார் என்பது.]

185. அற்றவர் என்பார் அவா அற்றார்; மற்றையார்
அற்றாக அற்ற திலர்.

Those only free from guilt, who are free from evil desires.

[எழு: அவா அற்றார், மற்றையார். பயனி: என்பார், இலர். அற்றவர் = துன்பமற்றவர். என்பார் = எனப்படுவோர். (வி. 157. w.)]

[அவாவின் குற்றம். அதைக் காப்பதே அறன்.]

186. அஞ்சுவ தோரும் அறனே, ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

Evil desires *to be* guarded against. They deceive.

[எழு: அஞ்சுவது, அவா. பயனி: அறனே(யாம்), வஞ்சிப்பத(ாகும்.) ஒரும், அசைச்சொல். அறன் = அறம். (வி. 17.)]

[அவாவே துன்பத்திற்குக் காரணம்.]

187. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம், அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

Sorrow the fruit of desire.

[எழு: துன்பம். பயனி: இல்லாகும், வரும்.]

[அவாவின்மை இம்மையிலும் நன்மையைத் தரும்.]

188. இன்பம் இடையறா தீண்டும், அவா என்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

Even here when desires cease pleasure is the result.

[எழு: இன்பம். பயனி: அறுது. துன்பத்துட்டுன்பம் = மிகுதியான துன்பம். (வி. 37.)]

XXXIII பாடம்.

MODESTY.

அடக்கம்.

[கல்வியின் இலட்சணம் அடக்கம்.]

189. முற்றும் உணர்ந்தவர் இல்லை; "முழுவதூஉங்
கற்றனம்" என்று களியற்க:
சிற்றுளியாற்
கல்லுந் தகருந்; தகரா,—கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால்.

There are none who know every thing. Be modest. The chisel and the sledge-hammer.

[எழு: உணர்ந்தவர், நீர், கல்லு. பயனி: இல்லை, களியற்க, தகரும், தகரா. கற்றனம். (வி. 83.) களியற்க. (வி. 93.) சிற்றுளியால். (வி. 121.) குழாய் = குழையையுடையவளே! (வி. 64. 93.)]

[தமது கல்விக்கு இன்னுமை ஒப்பிட வேண்டும்.]

190. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை,
அம்மா, பெரிதென் றகமகிழ்க;
தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று.

Compare yourself not with those below you, but with those above.

[எழு: நீர் (தொகை.) பயனி: மகிழ்க, அழிக. கற்றதெல்லாம் ... நாம்= நாங் கற்றது முழுதும்.]

[தமது நிறையைத் தாமே வியத்தலுந்தீது.]

191. விலக்கிய ஓம்பி, விதித்தனவே செய்யு'
நலத்தகையார் நல்வினையுந் தீதே, "புலப் பகையை
வென்றனெ', நல்லொழுக்கி னின்றேம்" பிற என்று
தம்பாடு தம்மிற் கொளின்.

Virtue becomes evil when a man makes a boast of it.

[எழு: நல்வினை. பயனி: தீது. பிற, அசைச்சொல். (வி. 116.)]

[பிறரால் நன்கு மதிக்கப்படுவதற்கு உபாயம்.]

192. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு'
மறவாமே நோற்ப தொன்றுண்டு:
பிறர் பிறர்
சீர் எல்லாந் தூற்றிச், சிறுமை புறங் காத்து,
யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

One method of obtaining reputation: Speak of men's virtues, conceal their faults, and be modest every where.

[எழு: ஒன்று; அது (தொகை.) பயனி: உண்டு, சொலல். மறவாமே. (வி. 90.)]

[நல்லோர் நீசரிடத்தில் சொல்லார், இழிவோர் சொல்வார்.]

193. புல்லாப் புன் கோட்டிப் புலவர் இடைப் புக்குக்
கல்லாத சொல்லுங் கடை; எல்லாங் கற்ற
கடா அயினுஞ் சான்றவர் சொல்லார், பொருண் மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

The mean ignorantly prate in the assembly of the unlearned. The wise are silent knowing it to be useless.

[எழு: கடை, சான்றவர். பயனி: சொல்லும், சொல்லார். செயப் படு: கல்லாதவற்றை, கற்றவற்றை (தொகை.) கடை=கடையானவன். (வி. 162.) எலாம் = எல்லாம். (வி. 41.)] விடுபாக்கு. (வி. 86.) புக்கு. (வி. 82.) (6.) 86.]

[பசியஓலையையும் உலர்ந்தஓலையையுங் குறித்தது.]

194. கற்றறிந்த நாவினார் சொல்லார்தஞ் சோர்வஞ்சி,
மற்றையர் ஆவார் பகர்வர்; பனையின் மேல்
வற்றிய ஓலை கலகலக்கும், எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி.

The learned are modestly silent; others speak. The dry leaf rustles, the green gives forth no sound.

[எழு: நாவினார், மற்றையர்ஆவார், ஓலை, ஒலி. பயனி: சொல்லார், பகர்வர், கலகலக்கும், இல்லை. பச்சோலை. (வி. 121.) ஆவார். (வி. 57.)]

XXXIV பாடம்.

BASENESS.

கீழ்மை.

[கீழ்மக்களின் செருக்கு.]

195. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச் சொல்;
எக்காலு,
முந்திரி மேற் காணி மிகுவதேற் கீழ் தன்னை
இந்திரனா எண்ணி விடும்.

The excellent boast not though possesst of every thing. If the base obtains a fraction more, he makes himself a god.

[எழு: விழுமியோர், கீழ். பயனி: சொல்லார், எண்ணிவிடும். செயப்படு: சொல்லை, தன்னை. கீழ் = கீழானவன். (வி. 162.) இந்திரனா = இந்திரனாக. (வி. 140.)]

[கீழ்மக்கள் யாவரிடத்தும் புகழ்ச்சியை விரும்பல்.]

196. தமரேயுந் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமராததனை அகற்றலே வேண்டும்.—
அமை ஆரும் வெற்ப! அணியாரே தம்மைத்
தம வேனுங் கொள்ளாக் கலம்.

Flattery to be rejected. Unbecoming ornaments.

[எழு: அகற்றல், ஒருவர். பயனி: வேண்டும், அணியாரே. தமர், தம. (வி. 93).]

[தம்மை வியவாமை.]

197. "பல கற்றோம் யாம்" என்று தற்புகழ வேண்டா;
அலர் கதிர் ஞாயிறைக் கைக்குடையுங் காக்கும்!
சில கற்றார் கண்ணும் உளவாம் பல கற்றார்க்
கச்சாணி அன்னதோர் சொல்.

Boast not yourself! A hand-umbrella hides the sun. A word like a lynch-pin.

[எழு: நீர் (தொகை), குடை, சொல். பயனி: வேண்டா, காக்கும், உளவாம். தற் = தன்னை. (வி. 152. 35.) கண்ணும். (வி. 63. 113.)]

[வேந்தனின் வலி.]

198. மறு மனத்தான் இல்லாத மாநலத்த வேந்தன்
உறு மனத்தன் ஆகி ஒழுகிற்,
செறு மனத்தார்—
பாயிரங் கூறிப் படை தொக்கால் என் செய்ப?
ஆயிரங் காக்கைக்கோர் கல்!

What can enemies do when a king is blameless and full of kindness? One stone suffices for a thousand crows.

[எழு: செறுமனத்தார், கல். பயனி: செய்ப, போதும் (தொகை.) தொக்கால். (வி. 82. (6.) 86.) மறுமனத்தான் இல்லாத = மாசில்லாத மனத்தனுகிய. உறுமனத்தன் = அன்புமிகுதியாக உள்ள மனசை உடையவன்.]

[அறிவுடையோர் தீமைக்கு அஞ்சுவது.]

199. அறிவுடையார் அன்றி அது பெறார் தம்மாற்
செறி பழியை அஞ்சார் சிறிதும்;—
பிறை நுதால்!—
வண்ணஞ்செய் வாள் விழியே அன்றி மறை குருட்டுக்
கண் அஞ்சுமோ இருளைக் கண்டு?

The wise alone dread blame. The blind eye does not fear darkness.

[எழு: பெறார், கண். பயனி: அஞ்சார், அஞ்சுமோ? நுதலாய். (வி. 157. 64.)]

[வேந்தரினும் அறிவோர் மேன்மையுள்ளவர்.]

200. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தா மற்றொவ்வார்;
மின்னு மணிப்
பூணும் பிற உறுப்பு,—பொன்னே!—அது புனையாக்
காணுங் கண் ணொக்குமோ? காண்!

Kings adorned, and learned men unadorned. No jewels needed by the eye!

[எழு: வேந்தர், உறுப்பு. பயனி: ஒவ்வார், ஒக்குமோ? மற்று. (வி. 107.)]

XXXV பாடம்.

HEARING.

கேள்வி.

[கேட்கத்தகும் நூலின் பொருள்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்குதல்.]

[கேள்வியால் வருஞ் செல்வஞ் சிறந்தது.]

201. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்; அச்செல்வஞ்
செல்வத்துள் எல்லாந் தலை.

The wealth that comes by hearing is the greatest.

[எழு: செல்வம், அச்செல்வம். பயனி: செவிச்செல்வம், தலை.]

[கேள்வியால் இடப்பட்டவருக்கு வரும் நன்மை.]

202. இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்றே,
ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல்.

The words of the just like a staff in slippery places.

[எழு: சொல். பயனி: அற்றே. ஊற்று. (வி. 41.) அற்றே. (வி. 109.)]

[கேட்டவர் வீண் வார்த்தைகளைப் பேசார்.]

203. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்,
இழைத்துணர்ந் தீண்டிய கேள்வி யவர்.

Even by misapprehension those who hear will not speak folly.

[எழு: கேள்வியவர். பயனி: சொல்லார்.]

[அடக்கங் கேள்வியரிடத்தே உண்டு.]

204. நுணங்கிய கேள்வியர் அல்லார்,
வணங்கிய வாயினர் ஆதல் அரிது.

Modest speech only with the truly learned.

[எழு: ஆதல். பயனி: அரிது.]

[மிகுந்தவரது சபையினிடத்துச் செய்யுந்திறம்.]

205. நன்றென் றவற்றுள்ளு நன்றே, முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

Not to speak before the elders.

[எழு: செறிவு. பயனி: நன்றே. முந்து = முந்தி.]

[மத மானங்களது தீமை.]

206. வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை!
நயவற்க நன்றி பயவா வினை!

Boast not! Delight not in deeds that yield no fruit!

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: வியவற்க, நயவற்க!]

XXXVI பாடம்.

PERSEVERANCE.

தாளாண்மை.

[முயற்சியை ஆளுந் தன்மை.]

[முயற்சி உடைமை மடிதலின்றி உற்சாகத்தோடு இருத்தல்.]

207. உறுதி பயப்ப கடைபோகா ஏனும்
இறுவரை காறு' முயல்க;
இறும் உயிர்க்கும்
ஆயுண் மருந்'தொழுக்க ற்'தன்'றால்; அல்லன போல்
ஆவனவும் உண்டு சில.

Never despair, though success does not appear. You give medicine even to the dying. The least likely things even come to pass.

[ஆகாதன போலத் தோன்றிப் பின்பு ஆவனவுஞ் சில உள; சீவன் தரும் மருந்தைச் சாம் எனத் தோன்றும் உயிர்கட்கு வாயிற் புகட்டுதல் குற்றம் அன்று; ஆதலால், நன்மை பயப்பவைகள் முற்றுப் பெறாவிடினும் முடிவுவரைக்கும் முயலுக! ஆல், அசை. இறு. (வி. 153.)]

[வறுமை வரினும் தீமை செய்யார் நல்லார்.]

208. நல்லா றொ'ழுக்கின் ற'லை நின்றார் நல்கூர்ந்தும்,
அல்லன செய்தற் கொ'ருப்படார்;
பல் பொறிச்
செங்கட் புலியேறறப் பசித்துந் தின்னு வாம்
பைங்கட் புனத்த பைங் கூழ்.

The tiger does not eat grass, though ever so hungry. The good do not stoop to unworthy deeds through poverty.

[எழு: தலை நின்றார், புலி. பயனி: ஒருப்படார், தின்னு. ஒழுக்கின் றலை = ஒழுக்கு, இன், தலை. (வி. 63. 65.) பைம். (வி. 121.) புனத்த = புனத்திலுள்ள. (வி. 93.)]

[நல்லோர் கடைப் பிடித்தல்.]

209. சிறு முயற்சி செய்தாங் குறு பயன் கொள்ளப்
பெறும் எனிற் றாழ்வரோ? தாழார்;
அறனல்ல
எண்மைய ஆயினுங், கைவிட் டரிதெனினும்,
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

Will those who forsake vice though easy, and perform difficult duties, shrink when by slight exertion great benefit is to be obtained?

[எழு: ஒழுகலார். பயனி: தாழார். கைவிட்டு = கைவிடுவது. எண்மைய = செய்தற்கு எளியவைகள். (எள் + மை + அ. வி. 94. 93.)]

[தாளாண்மையில் ஆகிய பயன்.]

210. ஆடு கோ டாகி அதரிடை நின்றதூஉங்
காழ் கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்;
வாழ்தலும் அன்ன தகைத்தே, ஒருவன்றான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

The branch that waves by the road side becomes a tree to which an elephant may be tied. Man is what he makes himself.

[எழு: நின்றதூஉம், வாழ்தல். பயனி: ஆகும், தகைத்தே. அதரிடை. (வி. 63.)]

[பெரியோர் காரியத்தையும் இகழாமை.]

211. உறு புலி ஊனிரை இன்றி ஒருநாட்
சிறு தேரை பற்றியுந் தின்னும்;
அறிவினாற்
காற் றொழில் என்று கருதற்க! கையினான்
மேற்றொழிலும் ஆங்கே மிகும்.

The tiger may eat frogs. Even a good thing becomes better by being well done.

[எழு: மேற்றொழில். பயனி: மிகும். ஆங்கு, ஏ, அசைநிலைகள். (வி. 116.)]

[கேடுவரினுந் தீமை செய்யார் பெரியோர்.]

212. ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானந் தலை வருவ செய்பவோ?
யானை
வரி முகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்.

The mighty will perish at home, but not disgrace themselves.

[எழு: மதுகையவர். பயனி: செய்பவோ? செயப்படு: வருவன வற்றை.]

XXXVII பாடம்.

ENERGY.

ஊக்கம்.

[மனமானது தொழில் செய்தலில் எழுச்சியை உடைத்தாதல்.]

[மனஎழுச்சியே உடைமை.]

213. உடையர் எனப்படுவ தூக்கம்; அஃதில்லார்
உடைய துடையரோ, மற்று?

Men of energy are men of possessions; and vice versa.

[எழு: படுவது, இல்லார். பயனி: ஊக்கம், உடையரோ? எனப்படுவது = சொல்லுதற்குக் காரணம். உடையது. மற்று = வேறுடையது உடையவர் என்று சொல்லுதற்குக் காரணமோ?)]

[மனஎழுச்சியின் பயன்.]

214. உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும்.

The wealth of the soul is wealth; all else passes away.

[எழு: உடைமை. பயனி: உடைமை, விடும்.)]

[ஊக்கமுடையாரது உயர்ச்சி.]

215. வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

The water-flower always on the top. Men's elevation proportioned to th... soul.

[எழு: நீட்டம், உயர்வு. பயனி: அனைய, அனையது. அனைய, அனையது. (வி. 93.) மாந்தர்தம் = மனிதர்களுடைய.)]

[முயற்சியிலே தவறுதல் இல்லாமலிருப்பது.]

216. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

Think ever on noble things. This will compensate for all you renounce.

[எழு: ஒருவன் (தொகை), அது. பயனி: உள்ளல், நீர்த்து. உள்ளல். (வி. 85.) நீர்த்து. (வி. 93.) மற்று, அசை.]

[விடாது முயற்சிசெய்தால் அரியதொழில்கள் எளிதில் முடியும்.]

217. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும்.

Undespairing energy needed.

[எழு: அசாவாமை, முயற்சி. பயனி: வேண்டும், தரும்.)]

[முயற்சியது சிறப்பு.]

218. தாளாண்மை என்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு.

The power of doing good belongs to the men of unfailing energy.

[எழு: செருக்கு. பயனி: தங்கிற்று. தகைமைக்கண். (வி. 63. 37.) தங்கிற்று = தங்கினது. (வி. 83.)]

XXXVIII பாடம்.

EFFORT.

முயற்சி.

[இடைவிடாது மெய்ம் முயற்சியை உடையவன் ஆதல்.]

[முயற்சியை உடையவனது நன்மை.]

219. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

Careless of pleasure, eager to be doing, he relieves the distresses of his kindred, and is a pillar.

[எழு: விழைவான். பயனி: தூண். விழையான் = விழையாதவன் ஆகி. (வி. 143.)]

[முயற்சியினால் செல்வம் உண்டாதல்.]

220. முயற்சி திருவினை ஆக்கும்;
முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

Energetic action brings wealth; and vice versa.

[எழு: முயற்சி, முயற்றின்மை. பயனி: ஆக்கும், விடும். திருவினை. (வி. 65.) புகுத்தி. (வி. 103.)]

[முயற்சியினால் துன்பம் நீங்குதல்.]

221. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

Sorrows like a flood are removed by determination.

[எழு: இடும்பை. பயனி: கெடும். உள்ளத்தின். (வி. 137. = உள்ளத்தினால்.)]

[முயற்சியின்மையின் இழிவு.]

222. பொறி இன்மை யார்க்கும் பழி அன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி.

No disgrace to be unfortunate. A disgrace to be inactive.

[எழு: பொறியின்மை, ஆள்வினையின்மை. பயனி: அன்று, பழி.]

[திடமான அறிவினது மேன்மை.]

223. உரம் ஒருவற் குள்ள வெறுக்கை! அஃ தில்லார்
மர மக்கள் ஆதலே வேறு.

Strength of purpose is dignity. Those without it are trees.

[எழு: உரம், இல்லார், ஆதல். பயனி: வெறுக்கை, மரம், வேறு.]

[முயற்சியாளனின் வெற்றி.]

224. ஊழையும் உப்பக்கங் காண்பர், உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

The undespairing laugh at fate.

[எழு: உஞற்றுபவர். பயனி: காண்பர். உப்பக்கம். (வி. 5.)]

XXXIX பாடம்.

THE WAY OF EXCELLENCE.

நல்வழி.

[நல்லோர் எதையும் எண்ணும் விதம்.]

225. மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத் தெவையுந் தீயவே ஆகும்;
எனைத் துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே,
மாசின் மனத்தின் அவர்.

Even good things done with malicious mind are evil. The pure take all to be good.

[எழு: எவையும், அவர். பயனி: ஆகும், காண்பவே.]

[நல்லோர் நடக்கை.]

226. மெய்யுணர்ந்தார் பொய்மேற் புலம்போக்கார், மெய்யுணர்ச்சி
கை வருதல் கண்ணுப் புலங் காப்பார்;
மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழி நாண' நீள் கதவாச்
சேர்ப்பார், நிறைத் தாழ் செறித்து.

Contempt of what is false. Watchfulness the door-post, fear of sin the door, integrity the bar.

[எழு: மெய்யுணர்ந்தார். பயனி: போக்கார், காப்பார், சேர்ப்பார். காப்பே நிலையா, காத்தலே கதவின் நிலையாகவும்.]

[நல்லோர் மனச்சாட்சியைப் பேணி நடத்தல்]

227. தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தான் அடங்கிற்
பின்னைத் தான் எய்தாப் பயன் இல்லை;
தன்னைக்
குடிகெடுக்கு' நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யிற்
பிடி படுக்கப் பட்ட களிறு.

Nothing unattainable to the conscientiously good. To obey one's own will brings slavery.

[எழு: பயன். தான் (தொகை.) பயனி: இல்லை, களிறு.]

[மனத்தை அடக்கி நடப்பதால் உறும்பயன்.]

228. நின்னை அறப்பெறு கிற்கிலே னென்னெஞ்சே!
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்?
நின்னை
அறப்பெறு கிற்பேனேல் பெற்றேன், மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்.

Self-restraint the key of heaven.

[எழு: நான் (தொகை.) பயனி: இலேன், பெறுகிற்பேன், பெற்றேன். பெறுகிற்கிலேன். இன், கு, சாரியைகள். (வி. 108. 89.)]

[நெஞ்சின் பயமில்லாதவர்க்கெங்கும் பயமில்லை.]

229. உள்ளூர் இருந்துந் தம் உள்ளம் அறப் பெற்றாரேற்,
கள்ளவிழ் சோலை ஆங் காட்டுள்ளார்; காட்டுள்ளும்
உள்ளம் அறப்பெறு கல்லாரே நாட்டுள்ளு'
நண்ணி நடு ஊர் உளார்.

Those who rule themselves are in the city as in solitude, and in solitude as in the city.

[எழு: அவர் (தொகை.) பயனி: உளார்.]

[புருஷார்த்தம் இவை எனல்.]

230. ஈதல் அறந்; தீவினைவிட் டீட்டல் பொருள்; எஞ்ஞான்றுங்
காதல் இருவர் கருத்துறவைத்
தாதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

Virtue, wealth, pleasure and emancipation defined.

[எழு: அறம், பொருள், இன்பம், வீடு. பயனி: ஈதல், ஈட்டல், பட்டது, விட்டது.]

XL பாடம்.

VIRTUE.

அறம்.

[கடவுளால் விதிக்கப்பட்டவைகளைச் செய்தலும் விலக்கப்பட் டவைகளை ஒழிதலும் ஆம்.]

[அறத்தினாலாகிய பயன்.]

231. சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும்;
அறத்தினூஉங் காக்கம் எவனோ உயிர்க்கு?

Virtue imparts dignity and prosperity.

[எழு: அறம் (தொகை.) பயனி: ஈனும். எவன்=எது. அறத்தினூஉங்கு= அறத்தின் ஊங்கு. (வி. 153. 61. 14.)]

[அறத்தின் செல்வம்.]

232. அறத்தினூஉங் காக்கமும் இல்லை; அதனை
Virtue the greatest gain. மறத்தலின் ஊங்கில்லை கேடு.

[எழு: ஆக்கம், கேடு. பயனி: இல்லை, இல்லை. அதனை = அது+அன்+ஐ. (வி. 71. 108.)]

[அறநெறி.]

233. ஒல்லும் வகையால் அறவினை, ஓவாதே,
Do virtuous deeds with all your might. செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: செயல். செயல். (வி. 85.) அறவினை. (வி. 33. 121. 154.)]

[அறம் இஃதெனல்.]

234. மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
Purity of mind alone is virtue. ஆகுல நீர பிற.

[எழு: ஒருவன் (தொகை), அறன், பிற. பயனி: ஆதல், அனைத்து, நீர. மனத்துக்கண (மனம், அத்து, கண்). (வி. 63. 66.) ஆதல். (வி. 85.) நீர = தன்மையயுடையன. (வி. 93.)]

[இதுவுமது.]

235. அழுக்கா றவாவெகுளி இன்னச்சொல் நான்கும்
Virtue consists in the absence of these four. இழுக்கா இயன்ற தறம்.

[எழு: அறம். பயனி: இயன்றது. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னச்சொல். (வி. 56.) நான்கும். (வி. 113) இழுக்கா. (வி. 86. (1)).]

[அறமாட்சி.]

236. அறத்தான் வருவதே இன்பம்; மற் றெல்லாம்
True pleasure from virtue alone. புறத்த, புகழும் இல.

[எழு: இன்பம், எல்லாம், புகழும். பயனி: வருவது, புறத்த, இல.]

XLI பாடம்.

SELF-RESTRAINT.

அடக்கம்.

[காயமும், வாக்கும், மனமுந் தீயவழியிலே செல்லாமல் அடங்குதல்.]

[அடக்கமுடையார் எள்ளப் படாமை.]

237. அடக்கம் உடையார் அறிவிலர் என் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம்;
மடைத் தலையில்
ஓடு மீன் ஓட ஒரு மீன் வரும் அளவும்
வாடி இருக்கும் ஆங் கொக்கு.

Don't underrate the reserved. The heron at the gate of the sluice.

[எழு: ஒருவன் (தொகை), கொக்கு. பயனி: வேண்டாம், இருக்கும்.]

[அடக்கத்தின் மாட்சி.]

238. நளி கடற் றண் சேர்ப்ப!—நல்கூர்ந்த மக்கட்
கணிகலம் ஆவ தடக்கம்;
பணிவில் சீர்
மாத்திரை இன்றி நடக்குமேல் வாழும் ஊர்
கோத்திரங் கூறப் படும்.

Self-restraint an ornament.

[எழு: அணிகலம், கோத்திரம். பயனி: அடக்கம், படும். ஊர் = ஊராராலே. (வி. 152. 162.)]

[கற்றோரை நிறைகுடத்திற்கொப்பிடல்.]

239. கற்றறிவார் கண்ட தடக்கம்; அடங்காதார்
பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார்;—
தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட!—
நிறைகுட நீர்தளும்பல் இல்.

Modesty with the wise. Boasting with the ill-disciplined. The water in a full vessel is not agitated.

[எழு: அடக்கம், அடங்காதார், நீர். பயனி: கண்டது, உரைப்பார், இல். நீர் = நீருக்கு. (வி. 152.)]

[அறிவில்லார் அடங்காமை.]

240. கோவாத சொல்லுங் குணன் இல்லா மாக்களை
நா வாய் அடக்கல் அரிதாகும்;
நாவாய்
களிகள் போற் றாங்குங் கடற் சேர்ப்ப!—வாங்கி
வளி தோட் கிடுவாரோ? இல்.

Restraint in speech hard to worthless evil speakers. Can you carry the wind in a bag?

[எழு: அடக்கல். பயனி: ஆகும்.]

[அடக்கமில்லாதவர் செல்வம் குரங்கின் கைக்கொள்ளி.]

241. உடைப் பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கம் இல் உள்ளத்தின் ஆகி
நடக்கையின்
ஒள்ளியன் அல்லான் மேல் வைத்தல், குரங்கின் கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

Riches, &c. bestowed on the unworthy like a firebrand in the hand of an ape.

[எழு: வைத்தல். பயனி: விடல். செயப்படு: பெருமை.]

[அடக்கத்தின் மேன்மை.]

Worldly advantages not the chief. To be master of oneself.

242. எண்ணக் குறைபடாச் செல்வமும், இற் பிறப்பும்,
மன்ன ருடைய உடைமையும்,
மன்னரால்
இன்னர் எனல் வேண்டா; இம்மைக்கும் உம்மைக்குந்
தம்மை உடைமை தலை.

[எழு: செல்வமும் &c., உடைமை. பயனி: வேண்டா, தலை.]

XLII பாடம்.

SELF RESTRAINT.

அடக்கம்.

[அடக்கத்தினுலாகிய பயன்.]

Self-restraint numbers men among the immortals.

243. அடக்கம் அமரருள் உய்க்கும்;
அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்.

[எழு: அடக்கம், அடங்காமை. பயனி: உய்க்கும், விடும். ஆர் இருள். (வி. 153. 152.)]

[நல்லோர் அடக்கத்தைப்பேணல்.]

Self-restraint the best possession.

244. காக்க, பொருளா, அடக்கத்தை;
ஆக்கம் அதனின் ஊஉங் கில்லை உயிர்க்கு.

[எழு: ஒருவன் (தொகை), ஆக்கம். பயனி: காக்க, இல்லை. காக்க. (வி. 85.)]

[அடக்கத்தின் மாட்சி.]

245. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
This is true loftiness. மலையினு மாணப் பெரிது.

[எழு: தோற்றம். பயனி: பெரிது. அடங்கியான் = அடங்கினவன்.]

[செல்வர்க்கு அடக்கந் தகுதி.]

246. எல்லார்க்கு நன்றாம் பணிதல், அவர் உள்ளுஞ்
An ornament to all, especially to the wealthy. செல்வர்க்கே செல்வந் தகைத்து.

[எழு: பணிதல். பயனி: நன்றாம், தகைத்து.]

[நாவின் அடக்கம்.]

247. யாகாவார் ஆயினு நா காக்க; காவாக்காற்
Government of the tongue. சோகாப்பர், சொல் லிழுக்குப் பட்டு.

[எழு: ஒருவர் (தொகை.) பயனி: காக்க, சோகாப்பர். காக்க. (வி. 140. (3.))]

[அடங்கா நாவினால் உறுந்தீமை.]

248. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
A wound from fire heals; one from the tongue never heals. நாவினாற் சுட்ட வடு.

[எழு: புண், வடு. பயனி: ஆறும், ஆறாதே.]

XLIII பாடம்.

ASSISTANCE TO OTHERS.

பிறர் உதவி.

[ஈகையால் உறுபயன்.]

249. எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ?—
பைந் தொடீ!—
நின்று பயன் உதவி, நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவுங் கனி.

The son must not be content with the remembrance of the father's liberality.

[எழு: மைந்தர், கன்றும். பயனி: மறுப்பரோ, உதவும். பைந்தொடீ=பசும்பொன்னாலாகிய வளையல்களையுடையவளே! (வி. 121. 162. 64.)]

[உடலின் உறுப்புகள் போல் ஒன்றிற்கொன்றுதவுவது ஈகை.]

250. பெரியவர் தந் நோய் போற் பிறர் நோய் கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க;—
தெரி இழாய்!—
மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

They feel for others' grief as for their own. The eye weeps for the diseases of the other members.

[எழு: பெரியவர், கண். பயனி: ஆவர், கலுழும். இழுதாவர்=இழுதைப்போல் ஆவார். (வி. 155.) இழாய்=இழையையுடையவளே! (வி. 93. 162.)]

[இகைக்கு நியாயம்.]

251. முன்னரே சா'நாண்; முனிதக்க மூப்'புள
பின்னரும்; பீ'டழிக்கு'ம் நோய் உள;
கொன்னே
பரவன்மின்! பற்றன்மின்! பாத்'துண்மின்! யாதுங்
கர'வன்மின்! கைத்துண்டாம் போழ்து.

The day of death, old age, disease stand round. Give accordingly.

[எழு: சாநாள், மூப்பு, நோய், நீர். பயனி: உள, பரவன்மின் ஆதி. பாத்து = பகுத்து. (வி. 41.) சாநாள். (வி. 153.)]

[இரவாமை இயாமையினும் நன்மை.]

252. மறுமையும் இம்மையு' நோக்கி ஒருவற்
'குறு'மா றியைவ கொடுத்தல்,
வறுமையால்
ஈதல் இசையா 'தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி உறும்.

Charity for the sake of this world and the future. Must not beg.

[எழு: இரவாமை. பயனி: உறும். இயைவ = இயைவன.]

[இவோர் இயார்க்குவமை.]

253. நடு ஊருள் வேதிகைச் சுற்றுக் கோட் புக்க
படு பனை அன்னர் பலர் நச்ச வாழ்வார்;
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்'துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றுப் பனை.

The palmyra in the midst of the village, and that in the burning ground.

[எழு: வாழ்வார், மாக்கள். பயனி: அன்னர், பனை.]

[உலகம் வாழ்தலிற்கு வேண்டியது மழையும் இசையும்.]

254. பெயற்பான் மழைபெய்யாக் கண்ணும் உலகஞ்
செயற்பால செய்யா விடினும்;—
கயற் புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப!—
என்னை உலகுய்யும் ஆறு?

How would the world go on if the good performed not virtuous actions even in times of drought?

[எழு: ஆறு. பயனி: என்னை. பெயற் பான் மழை = பெய்யவேண்டிய மழை.]

XLIV பாடம்.

BENEFICENCE.

ஈகை.

[இகையின் தன்மை.]

255. ஏற்றகை மாற்றாமை என்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்,
ஆற்றின்,—
மலிகடற் றண்சேர்ப்ப!—மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து.

Give to him who cannot recompense thee.

[எழு: ஈவது, ஈதல். பயனி: கடன், பெயர்த்து.]

[இகையின் மாத்திரை.]

256. இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க;
முறைப் புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

Give though you have but little. The beggar's dish is filled in time.

[எழு: அறப்பயன். பயனி: விடும். செயப்படு: அறப்பயனை.]

[ஈகையின் இயல்பும் ஈயாமையின் பயனும்.]

257. நட்டார்க்கு நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்; அட்ட
தடைத் திருந் துண்டொழுகும் ஆவதின் மாக்கட்
கடைக்கும் ஆம் அண்டைக் கதவு.

Share your food with friends and foes. To the selfish heaven's gate is closed.

[எழு: பாத்துண்டல், கதவு. பயனி: உண்டல், அடைக்கும். அடைக்கும் = அடைக்கப்படும். ஆவதின் மாக்கட்கு = ஆவது, இல், மக்களுக்கு = ஆக்கம் இல்லாத மனிதருக்கு. ஆம், அசைநிலை.]

[தீயோர் வாழ்வினும் சான்றோர் மிடிமை நல்லது.]

258. எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்,
அறுநீர்ச் சிறுகிணற் றூறல் பார்த் துண்பர்;
மறுமை அறியாதார் ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

The little spring preferred by the thirsty to the sea. Poverty better than the wealth of those who live for this world alone.

[எழு: மனிதர் (தொகை), நல்குரவு. பயனி: உண்பர், தலை. ஆக்கத்தின் = ஆக்கத்திலும்.]

[லோபியின் ஆஸ்தி.]

259. எனதெனா தென்றிருக்கும் ஏழை பொருளை
எனதெனா தென்றிருப்பன் யானுந்
தனதாயிற்
றானும் அதனை வழங்கான், பயன்றுவ்வான்
யானும் அதனை அது.

Whose is the miser's wealth? He does not enjoy or spend it, nor I.

[எழு: யானும், தானும். பயனி: இருப்பன், வழங்கான். அது=அப்படியே வழங்கேன்.]

260. அருமை உடைய பொருள் உடையார் தங்கட்
கருமம் உடையாரை நாடார்.—
எருமை மேல்
நாரை துயில் வதியும் ஊர்!—குளந் தொட்டுத்
தேரை வழிச் சென்றார் இல்.

The wealthy have not to seek for clients. Dig a tank and the frogs are sure to come!

[எழு: உடையார், சென்றார். பயனி: நாடார். இல்.]

XLV பாடம்.

CONFERRING BENEFITS.

பிறர் உபகாரம்.

[இகையின் சிறப்பு.]

261. கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு?

Benevolence seeks no recompence.

[எழு: கடப்பாடு, உலகு. பயனி: வேண்டா, ஆற்றும். மாரிமாட்டு. (வி. 63. 68.)]

[இகையின் பொருட்டாவது செல்வம்.]

262. தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

The proper use of wealth.

[எழு: பொருளெல்லாம். பயனி: பொருட்டு.]

[இகை புருஷார்த்த மாதல்.]

263. ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

He who does what befits his station lives; all others dead.

[எழு: அறிவான், மற்றையான். பயனி: வாழ்வான், வைக்கப்படும். படும். (வி. 137.)]

[இசைக்குவமை.]

264. ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேர் அறி வாளன் றிரு.

Prosperity of the benevolent like a gushing fountain in the middle of a town.

[எழு: திரு. பயனி: அற்றே. அவாம் = அவாவும். (வி. 87. (3.))]

[உபகாரஞ் செய்பவனது பொருள் பயன்படும் ஆறு.]

265. பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

Like a fruit bearing tree in the midst of a village.

[எழு: செல்வம். பயனி: அற்று. நயனுடையான்கண். (வி. 63.) ஆல், அசைச்சொல்.]

[இதுவுமது.]

266. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

Like a tree which unfailing yields ambrosia.

[எழு: செல்வம். பயனி: அற்று.]

XLVI பாடம்.

CONFERRING BENEFITS.

பிறர் உபகாரம்.

[பெரியோர் எக்காலத்தும் இகை குன்றுமை.]

267. இடனில் பருவத்தும், ஒப்புரவிற் கொல்கார்
கடன் அறி காட்சி யவர்.

Even out of season they do not fail.

[எழு: காட்சியவர். பயனி: ஒல்கார். இடன் = இடம். (வி. 17.) கடன் அறி காட்சியவர் = தாஞ்செய்யத் தக்கவைகளை அறிந்த இயற்கை அறிவை உடையவர்.]

[ஈகையின் மாட்சி.]

268. ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

Even loss if the result of benevolence, to be purchased.

[எழு: அஃது. பயனி: உடைத்து. கோட்டக்கது=கொள்ளத்தக்கது. கோள் = கொள்ளுதல்.]

[ஈகையின் தன்மை.]

269. வறியார்க்கொன் றீவதே ஈகை; மற் றெல்லாங்
குறி எதிர்ப்பை நீர துடைத்து.

Give to the poor; all else is mere self-interested calculation.

[எழு: ஈவதே, எல்லாம். பயனி: ஈகை, உடைத்து. குறி = குறிக்கப்பட்ட. (வி. 153.) எதிர்ப்பை = நோக்கத்தை.]

[கொள்ளுதல் தீது, கொடுத்தலே நன்று.]

270. நல்லா றெனினுங் கொளறீது; மேல் உலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

Bad to receive, good to give.

[எழு: கொளல், ஈதல். பயனி: தீது, நன்று.]

[தவத்திலும் ஈகையின் மேன்மை.]

271. ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்.

Great virtue to suffer hunger by fasting. Greater to feed the hungry.

[ஈகையே செல்வர் பொக்கிஷம்.]

272. அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

Relieve him who perishes with hunger.

[தீர்த்தல். (வி. 85.) வைப்புழி = வைக்கும் இடம். (வைப்பு + உழி.)]

XLVII பாடம்.

ANGER.

சினம்.

[மூவகைச் சினம்.]

273. கற்பிளவோ டொப்பர் கயவர்; கடுஞ் சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே;
விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீர்ஒழுகு சான்றோர் சினம்.

Stones, gold, water when divided like three kinds of people when angry.

[கடும். (வி. 121.) மகரந் தோன்றியது. போல்வாரே = நடுவாயினோர்.]

[சினத்தை அடக்குதலின் மேன்மை.]

274. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணம், என்க!
வெள்ளந்
தடுத்தல் அரிதோ? தடங் கரை தான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு!

To resist anger is virtue. Is it easier to resist the torrent, or to make a breach in the bank for it?

[ஓங்கு = ஓங்கும். (வி. 153.) என்க. (வி. 85.)]

[சான்றோர் சினத்தாலும் அருள் புரிதல்.]

275. முனிவினு நல்குவர் மூதறிஞர், உள்ளக்
கனிவினு நல்கார் கயவர்;
நனி விளைவிற்
காயினும் ஆகுங் கதலிதான், எட்டி பழுத்
தாயினும் ஆமோ? அறை!

The wise though angry will aid one. The base though pleased will not. Even unripe plantains good. Ripe etti good for nothing.

[முனிவினும். (வி. 113. (7.)) நல்குவர். (வி. 8.) மூதறிஞர். (வி.119. 93.) விளைவிற்கு = இன்னம் பழுக்காமல் விளையுங்காலத்தில் பழுத்தாயினும். (வி. 141.)]

[சினத்தை அடக்க நியாயம்.]

Let those who esteem us, and those who disesteem pass by. What though a fly settle on one's head!

276. மதித்திறப் பாரும் இறக்க, மதியா
மிதித்திறப் பாரும் இறக்க;
மிதித்தேறி
ஈயுந் தலைமேல் இருத்தலால் அஃ தறிவார்
காயுங் கதமின்மை நன்று.

[எழு: கதமின்மை. பயனி: நன்று.]

[இதுவுமது.]

Rashness in speech hurts one's self.

277. காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்,
ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

[எழு: அறிவுடையார். பயனி: சொல்லார்.]

[மேலோர் சினக்கார். கீழோர் சினப்பர்.]

The virtuous not angry with the base when they speak foolish words. The fool rages.

278. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்,
ஓர்த்ததனை
உள்ளத்தான் உள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டும் ஆங் கீழ்.

[எழு: விழுமியோர், கீழ். பயனி: வெகுளார், முட்டும். ஓர்த்து. (வி. 41. = ஓர்ந்து.) நேர்த்து = நேர்ந்து. (வி. 41.) உராய் = உராவி.]

XLVIII பாடம்.

FORBEARANCE.

பொறை.

[பொறையின்னது.]

279. இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப் பயன்;
எல்லாம்
ஒறுக்கு மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

Self-restraint in youth, gifts from the poor, forbearance in the mighty are excellent.

[எழு: அடக்கம், கொடை, பொறையே. பயனிலையும் அவையே.—உரன் = உரம். (வி. 17.)]

[சான்றோர் சினமடக்கம்.]

280. கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்;
ஒல்லை
இடு நீற்றாற் பை அவிந்த நாகம் போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

The good endure the stoning of the base ones' wrath. If you throw ashes on the snake it contracts its hood. So in these the sense of dignity.

[எழு: மேலோர். பயனி: உய்ப்பர். செயப்படு: இன்னாச்சொல்லை.)]

[சினமடக்கல்.]

281. மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை என்னார் அறிவுடையார்;
ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாம் அவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

Must never return evil for evil.

[எழு: அறிவுடையார், செய்யாமை. பயனி: என்னார், நன்று. தம் மாறு = ஏற்பார்க்குத் தங்களின்பேரில் பகை கொண்டவர்களுக்கு.]

[தீயோர் சினமும் மேலோர் சினமும்.]

282. நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப் பரக்கும்;
அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

The wrath of the base never expends itself. That of the good of itself dies out.

[எழு: வெகுளி, சினம். பயனி: பரக்கும், தணியும்.]

[தீமைக்கு நன்மை.]

283. உபகாரஞ் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும்,
உபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

It is not the way of the noble to do evil, even by a slip, to those who, unmindful of benefits conferred, injure them.

[எழு: ஊக்கல். பயனி: இல்.]

[சினத்தைக் காத்தற்கு உபமானம்.]

284. கூர்த்து நாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை;
நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக் காற் சொல்பவோ,
மேன்மக்க டம் வாயான் மீட்டு?

Does one bite a dog in return? Nor should we return railing for railing.

[எழு: கௌவினார், மேன்மக்கள். பயனி: இல்லை, சொல்பவோ? நீர்த்து = நீர்மையுள்ளது. (வி. 93.) கீழாய = கீழ்மை ஆனவைகளை. (வி. 93. 87.)]

[காரியங்களைப் பார்க்கும் நெறி.]

285. காய்தல் உவத்தல் அகற்றி, ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே;
காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும், உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

To examine impartially without aversion or affection is the part of the wise. Partiality blinds.

[எழு: ஆய்தல், குணம், குற்றம். பயனி: கண்ணதே, தோன்றாதாகும், கெடும்.]

XLIX பாடம்.

சினமின்மை.

[கோபஞ் செய்தற்குக் காரணமாகிய குற்றம் ஒருவனிடத்தே உண்டாகிய விடத்துங் கோபஞ் செய்யாமை.]

[சினத்தை அடக்கலின் தன்மை.]

286. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்;
அல்லிடத்துக் காக்கின் என்? காவாக்கால் என்?

Guard against anger when you have power to wreck your vengeance.

[எழு: சினங்காப்பான். பயனி: காப்பான். காப்பான் = காப்பவன். (வி. 95.) செல், அல். (வி. 153.)]

[சினத்தின் தீமை.]

287. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந்; தீய
Forsake wrath. பிறத்தல் அதனான் வரும்.

[எழு: ஒருவன் (தொகை), பிறத்தல். பயனி: மறத்தல், வரும்.]

[நகையும் மகிழ்ச்சியும் சினத்திற்கில்லை.]

288. நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்திற்
Anger destroys mirth and joy. பகையும் உளவோ பிற?

[எழு: பகையும். பயனி: உளவோ.]

[சினத்தாலாய தீமை.]

289. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க! காவாக்காற்
If you would guard yourself, guard against anger. றன்னையே கொல்லுஞ் சினம்.

[எழு: ஒருவன் (தொகை), சினம். பயனி: காக்க, கொல்லும்.]

[சினத்திற்கு இனமில்லை.]

290. சினம் என்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி
Anger the murderer, destroys relationship. இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்.

[எழு: சேர்ந்தாரைக் கொல்லி. பயனி: சுடும். கொல்லி. (வி. 96.)]

[சினத்தால் வருவது கேடு.]

291. சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு
He who cherishes anger will perish as the hand that smites the earth escapes not. நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

[எழு: கேடு. பயனி: அற்று.]

L பாடம்.

பொறுமை.

[பலபல இடையூறுகளைப் பொறுத்தல்.]

[நெறி.]

292. கோதை அருவிக் குளிர்வரை நன்னாட!—
பேதையோ டியாதும் உரையற்க;
பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கும்; ஒல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

Don't think it worth while to argue with the simple! He will misunderstand you.

[எழு: நீ (தொகை), பேதை, கழிதல். பயனி: உரையற்க, உரைக்கும், நன்று. பேதையோடியாதும். (வி. 24.)]

[சிநேகத்தின் கடிந்துரை.]

293. காதலார் சொல்லுங் கடுஞ்சொல் லுவந்துரைக்கும்
ஏதிலார் இன்சொலிற் றீதாமோ?
போதெலா,—
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப!—
ஆவ தறிவார்ப் பெறின்.

The harsh words of those who love us better than the complaisant words of our foes.

[எழு: கடுஞ்சொல். பயனி: ஆமோ?]

[நெறி.]

294. வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க! பொறான் ஆயில்
தூற்றாதே தூர விடல்.

If your friend act doubtfully, either forgive, or quietly withdraw yourself.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: பொறுக்க, விடல்.]

[சிநேகர் பிழை பொறுத்தல்.]

295. இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தானோவின், அல்லது
துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல், கானக நாட!
விலங்கிற்கும் விள்ளல் அரிது.

If a friend do evil to you, think it good, refrain from anger and blame yourself; but never forsake him.

[எழு: கைவிடுதல். பயனி: அரிது. நோவின் அல்லது = நோவதல்லாமல். இனிய ஒழிகு = அவை இனியவையாகும், சினத்தை விட்டுவிடு.]

[பொல்லாத இன்பத்தை ஒழியும் பொறை.]

296. இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இரிந்தக்க!
இன்பம்
ஒழியாமை கண்டாலும், ஓங்கருவி நாட!
பழி ஆகா ஆறே தலை.

Forsake pleasure that brings disgrace. To avoid guilt is the chief matter.

[எழு: ஆறு. பயனி: தலை. இரிந்தக்க = இரிக, இரிந்துபோக.]

[பொறுத்தல் நல்லோர் கடமை.]

297. தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றி, மற்
றெம்மை இகழ்ந்த வினைப் பயத்தால்
உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

To forgive despite and pity the offender's fate is the duty of the good.

[எழு: பரிவதூஉம். பயனி: கடன். இகழ்ந்தமை. (வி. 94.) நிரயத்து. (வி. 63.)]

LI பாடம்.

FORGIVENESS OF INJURIES.

பொறுமை.

[காரணம் பற்றியாவது, அறியாமையாலாவது, ஒருவன் தம்மிடத்திற்குத் தீங்குசெய்த விடத்துத் தாமும் அவனிடத்து அதனைச் செய்யாது பொறுத்தல்.]

[பொறுமைக்கு உவமை.]

298. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத், தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

Bear, as the earth does those who dig into it.

[எழு: பொறுத்தல். பயனி: தலை. பொறுத்தறலை = பொறுத்தல் தலை. (வி. 38.)]

[பொறுத்தலும் மறத்தலும் உடையது சாந்தம்.]

299. பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினு நன்று.

Forgive transgressions. To forget is better still.

[எழு: ஒருவன் (தொகை), மறத்தல். பயனி: பொறுத்தல், நன்று. பொறுத்தல். (வி. 85.)]

[பொறையினது சிறப்பு.]

300. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

The forbearing are like gold.

[எழு: உலகோர் (தொகை.) பயனி: வையாரே, வைப்பர்.]

[பொறையின் சிறப்பு மாறுமை.]

301. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்;
பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.

Revenge has one day's pleasure. Forgiveness, endless praise.

[எழு: இன்பம், புகழ். பயனி: உண்டு (தொகை.)]

[தீமைக்குத் தீமைசெய்யாமை.]

302. திறன் அல்ல தற்பிறர் செய்யினு' நோநொந்
தறன் அல்ல செய்யாமை நன்று.

Grieve for those who do evil.

[எழு: செய்யாமை. பயனி: நன்று. தற் = தன்னிடத்தில். (வி.152. 35.) அல்ல = அல்லாதவனற்றை. நோ = துன்பத்திற்காக.]

[தீமையை நன்மையால் வெல்லல்.]

303. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

Overcome despite by worthy conduct.

[எழு: தாம். பயனி: விடல். விடல். (வி. 85.)]

LII பாடம்.

LUST.

காமம்.

[காமம் பிற வகைக் குற்றங்களுக்கெல்லாம் வழி.]

304. கொலை அஞ்சார், பொய் நாணார், மானமும் ஓம்பார்,
களவொன்றோ ஏனையவுஞ் செய்வார், பழியொடு
பாவம் இஃதென்னார், பிறிது மற்றென் செய்யார்?
காமங் கதுவப் பட்டார்.

Lust the parent of all crimes.

[எழு: கதுவப்பட்டார். பயனி: அஞ்சார். &c. காமம்=காமத்தினால்.]

[சிற்றின்பத்தாற் கெடுவது பேரின்பம்.]

305. சிற்றின்பஞ் சின்னீர தாயினும், அஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப;
முற்றுந் தாம்
பேரின்ப மாக்கடல் ஆடுவார் வீழ்பவோ
பார் இன்பப் பாழ்ங் கும்பி யில்?

For trifling indulgences men lose eternal joys.

[சிற், சின், பேர். (வி. 121.) பாழ்ங். (வி. 30. விடுப, வீழ்ப. வி.81.)]

[மாதர் விழியைப் பழித்தல்.]

306. "தெண்ணீர்க் குவளை," "பொருகயல்" "வேல்," என்று
கண்ணில் புன் மாக்கள் கவற்ற, விடுவேனோ?
உண்ணீர் களைந்தக்கா னுங்கு சூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

Woman's eye.

[எழு: நான் (தொகை.) பயனி: விடுவேனோ, ஒழுகுவேன். தெண்ணீர் = தெள், நீர். உண்ணீர் = உள்நீர். (வி. 39.)]

[மாதர் நகையைப் பழித்தல்.]

307. முல்லை முகை முறுவல் முத்தென் றிவை பிதற்றுங்
கல்லாப் புன் மாக்கள் கவற்ற விடுவேனோ?
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

Women's teeth like Jasmin buds or pearls. I've seen them in the burning ground!

[எழு: யான் (தொகை.) பயனி: விடுவேனோ, ஒழுகுவேன்.]

[மாதர் உடலைப் பழித்தல்.]

308. பண்டம் அறியார், படுசாந்துங் கோதையுங்
கொண்டு பா ராட்டுவார், கண்டிலர் கொன்,
மண்டிப்
பெடைச் சேவல் வன் கழுகு பேர்த்திட்டுக் குத்தும்
முடைச் சாகா டச்சிற் றுழி?

The body in the burning ground pecked at by vultures.

[எழு: பாராட்டுவார். பயனி: கண்டிலர் கொல்? இட்டு அசைநிலை.]

[மாதர் தலையைப் பழித்தல்.]

The skull in the burning ground with grinning teeth.

309. கழிந்தார் இடுதலை கண்டார்நெஞ் சூட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி,
ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மின், இற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து?

[எழு: தலை. பயனி: சாற்றும். கண்ணவாய்=கண்களையுடையன ஆகி. (வி. 93. 86.) சால. (வி. 120.)]

LIII பாடம்.

CHARITY.

தருமம்.

[எந்நிலைமையாலுந்தருமஞ் செய்யப்படவேண்டும் எனல்.]

Men might preserve life at the expense of power and honour, if they knew that it would endure.

310. தம்முடை ஆற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக,
பின்னர்ச்
சிறுவரை ஆயினு மன்ற தமக்காஞ்
சிறுவரை இல்லை எனின்.

[எழு: ஒருவர் (தொகை.) பயனி: ஓம்புக! தம்முடை = தம்முடைய. (வி. 41.)]

Don't think thus shall we live and thus die, my soul! Say what wilt thou do when life is past.

311. ஆவா நாம் ஆக்க நசைஇ அற மறந்து
போவா நாம் என்னாப், புலைநெஞ்சே!
ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி எனினு நின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை!

[எழு: நீ (தொகை.) பயனி: உரை. வாழ்தி = வாழ்வாய். (வி. 83.)]

[நாளைக் கடத்தாதுடனே அறம் செய்யவேண்டும் எனல்.]

312. இன்று கொல், அன்று கொல், என்று கொல், என்னாது
பின்றையே நின்றது கூற்றம், என் றெண்ணி,
ஒருவுமின் றீயவை, ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம்.

Delay not! Death stands behind you!

[எழு: நீவிர் (தொகை.) பயனி: ஒருவுமின், மருவுமின்.]

313. உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற் பயந் தாஅங்
கறப் பயனுந்
தான் சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்.

The results of virtue like a small seed becoming a mighty tree.

[எழு: பயன். பயனி: விடும்.]

[நாட்போக்கை உணராதவர்.]

314. வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்;
வைகலும் வைகலை வைகும், என் றின்புறுவர்
வைகலும் வைகற் றம் வாழ்நாண் மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

Men never learn how fleeting their days are.

[எழு: உணராதார். பயனி: இன்புறுவர்.]

[இரப்பிகழ்ச்சி.]

One might sustain life at the expense of "the dearest jewel of the soul," honor, if one could be sure of life.

315. மான' அருங்கல' நீக்கி, இர வென்னும்
ஈன விளிவினால் வாழ்வேன், மன்,
ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதி சேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கும் எனின்.

[எழு: நான். பயனி: வாழ்வேன். மான அருங்கலம் = மானம் என்கிற பெறற்கரிய அணி.]

LIV பாடம்.

GOOD MANNERS.

ஒழுக்கம்.

[தங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றி நல்லவர்களாக ஒழுகுதல்.]

[ஒழுக்கத்தின் பயன்.]

Conduct more than life.

316. ஒழுக்கம் விழுப்பந் தரலான்,
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.

[எழு: ஒழுக்கம். பயனி: ஓம்பப்படும்.]

[இதுவுமது.]

Cherish rectitude. No other aid.

317. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந்
தெரிந்தோம்பித் தேரினும், அஃதே துணை.

[எழு: அஃதே. பயனி: துணை.]

[ஒழுக்கமில்லாமையாலுறுபயன்.]

318. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

No dignity to him whose conduct is not right.

[எழு: உயர்வு. பயனி: இல்லை.]

[நல்லொழுக்கந் தீயொழுக்கங்கள் பயன்.]

319. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

Rectitude the seed of good; its opposite, of evil.

[எழு: நல்லொழுக்கம், தீயொழுக்கம். பயனி: ஆகும், தரும்.]

[ஒழுக்கத்தின் அருமை.]

320. உலகத்தோ டொட்ட ஒழுகல்
பல கற்றுங், கல்லார் அறிவிலா தார்.

Live in conformity with the right usage of the world.

[எழு: அறிவிலாதார். பயனி: கல்லார். செயப்படு: ஒழுகலை.]

LV பாடம்.

BACKBITING.

புறங்கூறாமை.

[காணாத இடத்தே பிறரை இகழ்ந்து பேசாமை.]

[புறங் கூறுவானைக் கண்டஞ்சிய அச்சம்.]

321. பகை இன்று, பல்லார் பழி எடுத் தோதி,
நகை ஒன்றே நன் பயனுக் கொள்வான், பயம் இன்று
மெய் விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்
கை விதிர்த் தஞ்சப் படும். [போற்

The man who sports with others' good name will be dreaded as a man who mutilates and murders for amusement.

[எழு: கொள்வான். பயனி: அஞ்சப்படும். கொள்வான் = கொள்பவன். (வி. 95.) அஞ்சப்படும் = அஞ்சப்படுவான். கைவிதிர்த்து = சரீர உறுப்புகள் நடுங்கி. (வி. 137.) இன்று=இன்றி. (நன். 173.) காண்பான்= காணும்பொருட்டு. (வி. 86. 2.)]

[புறங் கூறல் சான்றோரைச் சாராமை.]

322. கடுக்கி ஒருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினும் மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்கம் இலாதவர் தூய மனத்தார்,
விளக்கினுள் ஒண் சுடரே போன்று.

The good heed not evil speakers. They are like the flame in a lantern.

[எழு: மனத்தார். பயனி: இலாதவர்.]

[புறங் கூறல் இவ்வளவு கொடிதெனல்.]

323. கணமலை நன்னாட!—கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதாற்
குணன் அழுங்கக்
குற்றம் உழை நின்று கூறுஞ் சிறியவர் கட்
கெற்றால் இயன்றதோ நா?

Hard to enumerate men's good qualities before their face. How does the tongue utter their faults?

[எழு: நா. பயனி: இயன்றதோ? ஆல், அசைச்சொல். குணன் = குணம். (வி. 17.)]

[புறங் கூறலால் தனக்கே உறும் நஷ்டம்.]

324. பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்;—
நல்லாய்!—
மணலின் முழுகி மறைந்து கிடக்கு
நுணலுந்தன் வாயாற் கெடும்.

A fool betrayed by his words. The frog in the sand by its croak.

[எழு: பேதை, நுணல். பயனி: துயர்ப்படுக்கும், கெடும்.]

[புறங்கூறல் தீயோர் பண்பு.]

325. உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங் கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே;
வண்டு மலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும் பொழில் வாய்; வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி?

The base overlooks all good qualities and speaks only of *their bad ones.*

[எழு: புகல்வது, வண்டு, வேம்பு. பயனி: குற்றம், விரும்பும், கனி. கீழ். (வி. 162.) வாய். (வி. 63.) கனி. (வி. 131.)]

LVI பாடம்.

BACKBITING.

புறங் கூறாமை.

[புறங்கூறாமையின் மேன்மை.]

326. அறங் கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங் கூறான் என்றல் இனிது.

Though in other respects wicked, this is a redeeming quality.

[எழு: என்றல். பயனி: இனிது. கூறான் = கூறாதவனாகி.]

புறங்கூறலில் உறும் கேடு.

327. புறங் கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

Better die than live by defaming others.

[எழு: சாதல். பயனி: தரும்.]

[சினத்தாலும் புறங்கூறல் தீது.]

328. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

Better speak mercilessly to a man than evil of him.

[எழு: நீவிர் (தொகை.) பயனி: சொல்லற்க! செயப்படு: சொல்லை. பின்னோக்கா = பின்வருங் குற்றத்தை நோக்காத.]

[புறங்கூறலின் தீமை.]

329. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை
புறஞ்சொல்லும் புன்மையாற் காணப் படும்.

This habit proclaims a man whose heart is a stranger to virtue.

[எழு. அன்மை. பயனி: காணப்படும். தருமம் நன்றென்று சொல்பவனுடைய மனதில் தருமம் இல்லை என்பது.]

[புறங்கூறலால் தனக்கே உறும் புறங்கூறல்.]

330. பிறன்பழி கூறுவான் றன்பழி உள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

Such an one is sure to have his worst faults dilated upon.

[எழு: கூறுவான். பயனி: கூறப்படும்.]

[புறங்கூறல் நீக்கும் வகை.]

331. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற் பிற்
றீதுண்டோ மன்னும் உயிர்க்கு?

He who scrutinizes his own faults as he would an enemy's.

[எழு: தீது. பயனி: உண்டோ?]

LVII பாடம்.

TRUTH.

மெய்ம்மை.

[பொய் இன்னாதிற் பெரிதெனல்.]

332. இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசை அன்று; வையத் தியற்கை;
நசை அழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇச் செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்றம் உடைத்து.

Not wrong to refuse; but quite natural. To lie is worse than even ingratitude.

[எழு: என்றல், பொய்த்தல். பயனி: அன்று, இயற்கை, உடைத்து.]

[வறுமையின் பயன்.]

333. கால் ஆடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேல் ஆடு’ மீனிற் பலர் ஆவர்;
ஏலா
இடர் ஒருவர் உற்றக்கால்,—ஈர்ங் குன்ற’ நாட!—
தொ’டர்புடையேம் என்பார் சிலர்.

In prosperity friends like the stars. In adversity very few.

[எழு: கிளைஞர், சிலர். பயனி: பலர்ஆவர், என்பார். கால் ஆடு போழ்தில் = முயற்சியாற் செல்வம் உண்டான காலம். ஈர்ம் = ஈரம் = ஈரபாகத்தை உடைய. •(வி. 41.)]

[இதுவுமது.]

334. நல்லாவின் கன்று’யின் நாகும் விலைபெறூஉம்;
கல்லாரே ஆயினுஞ் செல்வர் வாய்ச் சொற் செல்லும்;
புல்லீரப் போழ்தின் உழவே போன் மீ’தாடிச்
செல்லாவா’ நல்கூர்ந்தார் சொல்.

A good cow's calf sells. Rich men's words pass current. The words of the poor like ploughing in the mire.

[எழு: சொல். பயனி: செல்லும், செல்லாவாம்.]

[கல்வியால் இயற்கைக் குணம் மாறுமை.]

335. இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்;—
தடங்கண்ணாய்!—
உப்பொடு நெய்பா’ற்யிர்காயம் பெய்’தடினுங்
கை’ப்பறு பேய்ச்சுரையின் காய்.

The wild gourd never can lose its bitterness. So stubborn spirits never bend.

[எழு: அடங்காதார், காய். பயனி: அடங்கார், கைப்பறு.]

[அறநெறி ஒன்று.]

336. ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்;
பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி; ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

Cows of many colours; milk always white. Virtue one–many sects.

[எழு: பால், அறநெறி, சமயங்கள் (தொகை.) பயனி: அல்லவாம், ஆகும், கொளல். கொளல் = கொண்டிருக்கும்.]

[நல்வினை தீவினைத் தொடர்பு.]

337. தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வது மற்
றியாங் கணுந் தேரிற், பிறிதில்லை;
ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே
கூற்றங் கொண் டோடும் பொழுது.

In death nothing accompanies a man but his deeds.

[எழு: வினை. பயனி: பிறிதில்லை.]

LVIII பாடம்.

TRUTH.

வாய்மை.

[பொய்யின் பயன்.]

338. தன்னெஞ் சறிவது பொய்யற்க! பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

Lie not wilfully. Conscience will smart.

[எழு: ஒருவன். (தொகை), நெஞ்சு. பயனி: பொய்யற்க! சுடும்.]

[மெய்யின் பயன்.]

339. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

He who is not false-hearted lives in the hearts of all.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: உளன்.]

[மெய்யின் மேன்மை.]

340. மனத்தொடு வாய்மை மொழியிற்
றவத்தொடு தானஞ்செய் வாரிற் றலை.

He who speaks the truth from his heart is greater than ascetics and liberal men.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: தலை.]

[மெய்யொடு சேர்ந்தது இன்னது.]

341. புறந் தூய்மை நீரான் அமையும்; அகந் தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

Outward purity obtained by water. Purity of soul from truth.

[எழு: தூய்மை. பயனி: அமையும், படும்.]

[மெய்யின் சிறப்பு.]

342. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

Not every lamp a light. The lamp of truth.

[எழு: விளக்கு. பயனி: அல்ல, விளக்கு.]

[மெய்யின் முதன்மை.]

343. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

Nothing like truth.

[எழு: பிற. பயனி: இல்லை.]

LIX பாடம்.

JUST CONCEPTIONS OF THINGS.

மெய்யுணர்வு.

[கடவுள், மோட்சம் முதலியவைகளைப்பற்றிய மெய்யுணர்வு.]

[மெய்யுணர்வின் பயன்.]

344. இருணீங்கி இன்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

To the clearly discerning, no mental darkness; only pure pleasure.

[எழு: இன்பம். பயனி: பயக்கும்.]

[தெளிந்த ஞானம்.]

345. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு
வையத்தின் வான நணிய துடைத்து.

Heaven nearer than earth to those who have no doubts.

[எழு: வானம். பயனி: உடைத்து.]

[தீர்ந்த உணர்ச்சி.]

346. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

Knowledge is the perception of things as they are.

[எழு: அறிவு. பயனி: காண்பது.]

[ஒழுக்கம்.]

347. சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

Knowledge is that which leads to virtue.

[எழு: அறிவு. பயனி: உய்ப்பது. இடத்தால் = மனஞ் சென்ற இடத்திலே.—விடா = விடாமல். (வி. 137.)]

[ஆராய்ச்சி ஞானம்.]

348. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

Due discrimination necessary to knowledge.

[எழு: அறிவு. பயனி: காண்பது.]

LX பாடம்.

KNOWLEDGE.

அறிவு.

[கல்வி கேள்விகளினலாகிய அறிவோடு உண்மை அறிவு.]

[நுண்ணறிவு.]

349. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

To be intelligible and intelligent is knowledge.

[எழு: அறிவு. பயனி: காண்பது.]

[உலக ஞானம்.]

350. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

Knowledge consists in doing as the world does.

[எழு: அறிவு. பயனி: உறைவது. எவ்வது, அவ்வது. (வி. 56.)]

[அறிவின் பயன்.]

351. அறிவுடையார் ஆவ தறிவார்;
அறிவிலார் அஃதறி கல்லா தவர்.

Those who are possessed of knowledge have an insight into the future.

[எழு: அறிவுடையார், அறிவில்லார். பயனி: அறிவார், அறிகல்லா தவர். அறிகல்லாதவர், அறி, கு, அல்லாதவர். (வி. 108.) ஆவது. (வி. 95.)]

352. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை;
அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில்.

Not to fear what should be feared is folly.

[எழு: அஞ்சாமை, அஞ்சல். பயனி: பேதைமை, தொழில். செயப்படு: அஞ்சுவதை.]

[அறிவின் மேன்மை.]

353. அறிவுடையார் எல்லாம் உடையார்;
அறிவிலார் என்னுடையர் ஏனும் இலர்.

The wise alone are wealthy.

[எழு: அறிவுடையார், இலர். பயனி: உடையார், இலர்.]

[இன்னதெளிது இன்னது அரிதெனல்.]

354. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

Easy to say; hard to do.

[எழு: சொல்லுதல், செயல். பயனி: எளிய ஆம்.]

LXI பாடம்.

IGNORANCE.

அறிவின்மை.

[அறிவில்லார்க்கு உரைக்கும் அறம்.]

355. பன்றிக் கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின் மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா தாகுஞ் செவிக்கு.

Sweet mangoes mashed up for pigs: a tree cut down on the top of a hill: good instruction to a fool.

[எழு: அறத்தாறு. பயனி: இசையா ஆகும்.]

[மூடர்க்குரைக்கும் அறிவு.]

Can't make charcoal white.

356. பாலாற் கழீஇப் பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக் கிருந்தன்று;
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா உடம்பிற் கறிவு.

[எழு: அறிவு. பயனி: புகலொல்லா. கழீஇ, கடாஅய். (வி. 79. 86.) குறினும் = கூறினும். (வி. 41.) வாலிதாம் = வால், இது, ஆம் = வெள்ளிதாகிய. (வி. 93. 87.) (3.)]

[இதுவுமது.]

The fly desires not the fragrant honey. The base esteem not sweet and powerful words.

357. பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
திழிந்தவை காமுறூஉம் ஈப்போல்,
இழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னாகுந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு?

[எழு: தேர்வு. பயனி: என்னாகும்?]

[இதுவுமது.]

The base rejects the words of the learned and seeks the assembly of congenial fools.

358. கற்றார் உரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ் சுதைத்தலான் மற்றும்ஓர்
தன்போல் ஒருவன் முகநோக்கித் தானும்ஓர்
புன்கோட்டி கொள்ளும்ஆங் கீழ்.

[எழு: கீழ். பயனி: கொள்ளும். செயப்படு: கோட்டியை. ஆல், ஓர், அசைநிலைகள்.]

[மூடரை நாய்க்குவமித்தல்.]

359. கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு,
மெல்ல
இருப்பினு' நாய் இருந் தற்றே, இராஅ
துரைப்பினு' நாய் குரைத் தற்று.

When a fool speaks he betrays his folly.

[எழு: ஒருவன் இருப்பு (தொகை), உரைப்பு. பயனி: அற்று.]

[மூடர் அறிஞராகாமைக்குதாரணம்.]

360. மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போன்,
மிக்க
இன' நல நன்குடைய ஆயினும் என்றும்
மன' நலம் ஆகா வாங் கீழ்.

The base never changes. The sea receives many streams but is salt still.

[எழு: கீழ். பயனி: ஆகாவாம்.]

LXII பாடம்.

WEALTH UNBLESS'D.

நன்றியில் செல்வம்.

[கொடாதவர் செல்வம் விளாமரம்.]

361. *அருகின தாகிப் பலபழுத்தக் கண்ணும்,
பொரிதாள் விளவினை வாவல் குறுகா;
பெரிதணியர் ஆயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று.

The wealth of the base not to be desired. The bat does not approach the vilam.

[எழு: வாவல், செல்வம். பயனி: குறுகா, அன்று. *அருகிலதாகி எ–ம் பாடம். (வி. 41.)]

[இதுவுமது. கள்ளி.]

362. அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ ஆயினுங்
கள்ளிமேற் கைநீட்டார், சூடும்பூ அன்மையால்:
செல்வம் பெரிதுடையர் ஆயினுங் கீழ்களை
நள்ளார் அறிவுடை யார்.

None pluck the kalli flowers. The wise approach not the base.

[எழு: அறிவுடையார். பயனி: நள்ளார். செயப்படு: கீழ்களை. முகிழ. (வி. 93.)]

[கொடுப்பவர் செல்வம் கிணறு.]

363. மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவர் இல் கிணற்றின்கட் சென்றுண்பர்:
செல்வம் பெரிதுடையர் ஆயினுஞ் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை.

Though they live on the sea-shore, they go to the fresh spring to drink.

[எழு: ஒருவர், நசை. பயனி: உண்பர், ஆம், (தொகை.) திரைய = திரையையுடைய. நல்குவார் கட்டே = நல்குவாரினிடத்திலே.]

[புண்ணியத்திற்கு இம்மையில் பலனில்லை.]

364. புணர்கடல் சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே!
உணர்வ துடையார் இருப்ப,
உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே,
பட்டுந் துகிலும் உடுத்து.

Virtue quite another matter. The senseless dressed in silks!

[எழு: புண்ணியம், போல்வார். பயனி: வேறே, வாழ்வரே.]

[இதுவுமது.]

365. பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்ஞெளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்:
வெண்மை உடையார் விழுச்செல்வம் எய்தியக்கால்
வண்மையும் அன்ன தகைத்து.

It rains into the sea, while the rice-corn droops. So the foolish rich dispense their gifts.

[எழு: வண்மை. பயனி: அன்னதகைத்து.]

[செல்வத்தால் உறுபயன்.]

366. ஆகா தெனினும் அகத்துநெய் உண்டாகிற்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்;
யாதுங்
கொடாஅர் எனினும், உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்.

Ants around the butter-pot, though closed; so men around the wealthy.

[எழு: எறும்பு, உலகத்தவர். பயனி: சுற்றும், விடாஅர்.]

LXIII பாடம்.

CAUTION AND PRUDENCE.

தெரிந்து செயல் வகை.

[ஒருவன் தான் செய்யுந்தொழில்களை ஆராய்ந்து செய்யுந்திறம்.]

[தெரிந்து செயல்வகை நெறி.]

367. அழிவதூஉம், ஆவதூஉம் ஆகி
வழி பயக்கும் ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

Carefully consider the profit and loss.

[எழு: ஒருவன். பயனி: செயல். (வி. 85.)]

[எதைத்தெரிதல்.]

368. ஆக்கங் கருதி, முதல் இழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

Seeking gain and losing one's capital.

[எழு: அறிவுடையார். பயனி: ஊக்கார். செயப்படு: செய்வினையை.]

[எதுகெடும்.]

369. செய்தக்க அல்ல செயக்கெடும்;
செய்தக்க செய்யாமை யானுங் கெடும்.

He will perish who does improper things or who neglects duties.

[எழு: ஒருவன். பயனி: கெடும் = கெடுவான். (வி. 137.) செய்தக்க = செய்யத்தக்க. தக்க அல்ல = தகாதவைகளை.]

[எப்பொழுது தெரிதல்.]

370. எண்ணித் துணிக கருமங்! துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு.

Calculate before you venture! To venture first and then to think is folly.

[எழு: ஒருவன், என்பது. பயனி: துணிக, இழுக்கு.]

[எவரைத்தெரிதல்.]

371. நன்றாற்றல் உள்ளுந் தவறுண் டவர்அவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

Even good becomes faulty if there is no discrimination.

[எழு: தவறு. பயனி: உண்டு.]

[எதைத்தெரிதல்.]

372. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந்: தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

Act with a regard to general opinion. The world will not tolerate excentricities.

[எழு: செயல், உலகு. பயனி: வேண்டும், கொள்ளாது.

LXIV பாடம்.

ESTIMATION OF RESOURCES.

வலி அறிதல்.

[நால்வகை வலிமைகளையும் அளந்து அறிதல்.]

[அரசன் வலி அறிதல்.]

373. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

Estimate these four carefully.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: செயல். (வி. 85.)]

[தன் வலி அறிதல்.]

374. அமைந்தாங் கொழுகான், அளவறியான், றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

The rash, the injudicious and the braggart will perish.

[எழு: ஒழுகாதவனும் அறியாதவனுமாகி வியந்தவன். பயனி: கெடும். (வி. 137.)]

[தனக்குள்ளதை அறிதல்.]

375. பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

A load of peacock's feathers even will break down the bandy.

[எழு: சாகாடு. பயனி: இறும்.]

[தன்வினையை அறிதல்.]

376. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

One on the end of a bough will perish if he tries to go beyond.

[எழு: அவ்வெழுச்சி. பயனி: விடும். கொம்பர். (வி. 17.)]

[தன்வரத்து அறிதல்.]

377. ஆற்றின் அளவறிந் தீக! அது பொருள்
போற்றி வழங்கு நெறி.

Give in proportion to your income.

[எழு: ஒருவன் (தொகை), அது. பயனி: ஈக, நெறி.]

[தெரிந்து நடவாதவன் முடிவு.]

378. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உள போல
இல் லாகித் தோன்றாக் கெடும்.

Prosperity will soon depart if a man does not live according to his resources.

[எழு: வாழ்க்கை. பயனி: கெடும்.]

LXV பாடம்.

FOLLY.

பேதைமை.

[அறிவின்மையால் மறுமைக்குறுதியையும் இம்மைப்பயனையும் இகழ்தல்.]

[பேதைமை இன்னது.]

379. பேதைமை என்பதொன் றியாதெனின், ஏதங்கொண்
டூதியம் போக விடல்.

Folly to let go real gain.

[எழு: பேதைமை. பயனி: விடல்.]

[பேதைமை விகற்பம்.]

380. பேதைமையுள் எல்லாம் பேதைமை, காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

Folly to love what is not attainable.

[எழு: பேதைமை. பயனி: செயல். கையல்லதன்கண் = கை, அல்லது, அன், கண். (வி. 93. 123. 63.)]

[இந்நான்கும் பேதைதொழில்.]

381. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

Apathy the mark of a fool.

[எழு: இந்நான்கும். பயனி: தொழில்.]

[பேதைகளின் விகற்பம்.]

382. ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்துந், தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்.

No fool like him who learns and teaches and does not himself obey.

[எழு: பேதையார். பயன்: இல்.]

[பேதையின் குணம்.]

383. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்,
பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை.

When the fool grows rich strangers are filled and his own hunger.

[எழு: தமர். பயனி: பசிப்பர்.]

[பேதையின் இழிமை.]

384. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற், சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

Like going to bed with feet unwashed.

[எழு: புகல். பயனி: அற்று. கழாஅ = கழுவாத. (வி. 41, 91.) ஆல், அசை. குழாஅத்து, குழாம், அத்து. (வி. 41. 66. 152.)]

LXVI பாடம்.

FOOLISH SPEAKING.

பயனில்லாதசொல்.

[தமக்கும் பிறருக்கும் பிரயோசனம் ஒன்றையுந் தராத சொற்கள்.]

[பயனிலாதவை சொல்லலாலாகிய பயன்.]

385. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

The vain talker despised by all.

[எழு: சொல்லுவான். பயனி: எள்ளப்படும். எல்லாரும் = எல்லாராலும். (வி. 152.) எள்ளப்படும். (வி. 137.)]

[பயனிலாதவை சொல்லியவனின் இழிவு.]

386. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்!
மக்கட் பதடி எனல்!

Don't call him "man," call him "chaff of mankind!"

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: எனல், எனல். (வி. 92.) எனல். (வி. 85.)]

[பயனிலாத சொல் இன்னாதினும் இழிவெனல்]

387. நயனில சொல்லினுஞ் சொல்லுக; சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

Even though unkind words be spoken, never speak useless words.

[எழு: ஒருவன் (தொகை), சொல்லாமை. பயனி: சொல்லுக! நன்று.]

[இன்னோர் பயனில்லாத சொல் சொல்லார் எனல்.]

388. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

They who seek for rare wisdom will not utter unprofitable words.

[எழு: அறிவினார். பயனி: சொல்லார்.]

[இதுவுமது.]

389. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார்,
மருடீர்ந்த மாசறு காட்சி யவர்.

Those who see truth without bewilderment will not even forgetfully utter profitless words.

[எழு: காட்சியவர். பயனி: சொல்லார். செயப்படு: பொருள் தீர்ந்தவைகளை.]

[அறிவில்லாதவரது செறிவில்லாமை.]

390. அறைபறை அன்னர் கயவர், தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

The mean are like a drum, proclaiming every secret.

[எழு: கயவர். பயனி: அன்னர்.]

LXVII பாடம்.

ENVY.

பொறாமை.

[பிறர் செல்வம் முதலானவை கண்டவிடத்துப் பொறாமைப்படாமை.]

[பொறாமைக்கு இன்னாதில்லை எனல்.]

391. அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான்
பிறன் ஆக்கம் பேணா தழுக்கறுப் பான்.

He does not desire virtue or success who lives in envy.

[எழு: என்பான். பயனி: அழுக்கறுப்பான். வேண்டாதான் என்பான் = வேண்டாதவன் என்று சொல்லப்படுபவன். அறன் ஆக்கம். (வி. 156.)]

392. அழுக்கா றுடையார்க் கது சாலும்; ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

His envy enough to ruin a man, though his enemies fail.

[எழு: அது, அது (தொகை.) பயனி: சாலும், ஈன்பது.]

[பொறாமையினால் இன்னாது கெடும் எனல்.]

393. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம்
உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.

The family of him who grudges his neighbour's gifts will perish.

[எழு: சுற்றம். பயனி: கெடும்.]

[இவர்கள் செழிப்பதில்லை.]

394. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ்
செவ்வியான் கேடு’ நினைக்கப் படும்.

The prosperity of the envious and the destruction of the just would be a puzzle.

[எழு: ஆக்கம், கேடு. பயனி: நினைக்கப்படும்.]

[உட்பகை கொண்ட குடி.]

395. அரம்பொருத பொன்போலத் தேயும்
உரம்பொரு துட்பகை உற்ற குடி.

The malicious household destroyed like gold by the file.

[எழு: குடி. பயனி: தேயும்.]

[கீழ்மக்கள் பொறாமை.]

396. உடுப்பதூஉம் உண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

The base envies his neighbour's clothes and food.

[எழு: கீழ். பயனி: ஆகும். வற்று = வல் + து. (வி. 93.) ஆகும். (வி. 137.) கீழ். (வி. 163.)]

LXVIII பாடம்.

HOSPITALITY.

விருந்தோம்பல்.

[விருந்தினரை உபசரித்தல்.]

[இல்வாழ்க்கையின் இயல்பு.]

397. விருந்து புறந்தரான், வேளாண்மை செய்யான்,
பெருந்தக் கவரையும் பேணான்,
பிரிந்து போய்க்
கல்லான், கடுவினை மேற்கொண் டொழுகும் ஏல்,
இல்வாழ்க்கை என்ப திருள்.

What is domestic felicity if such an one can be said to flourish?

[எழு: இல்வாழ்க்கை. பயனி: இருள். தரான், செய்யான், பேணான், கல்லான், இவை எதிர்மறைப் பெயரெச்சத்தால் உண்டாகும் வினைப் பெயர்கள். (வி. 95.=தராதவன், செய்யாதவன், பேணாதவன், கல்லாதவன்.) ஒழுகும்=ஒழுகுவான். (வி. 137.)]

[விருந்தின் தன்மை.]

398. அட்டுண்டு வாழ்வார்க் கதிதிகள், எஞ்ஞான்றும்
அட்டுண்ணா மாட்சி உடையவர்;
அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வார் அதிதிகள் என்றுரைத்தல்
வீழ்வார்க்கு வீழ்வார் துணை.

The benefit of hospitality.

[எழு: அதிதிகள், வீழ்வார். பயனி: உடையவர், துணை.]

[விருந்தோம்பலின் பயன்.]

399. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

His wealth never decays who cherish ever the coming guest.

[எழு: வாழ்க்கை. பயனி: இன்று. வரு=வரும்.]

[விருந்தோம் பாமை.]

400. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு.

Poverty amidst wealth is want of hospitality.

[எழு: இன்மை, அது (தொகை.) பயனி: மடமை, உண்டு.].

[விருந்தினர்.]

401. மோப்பக் குழையும் அனிச்ச' முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

The anicham flower fades if you smell it; so a guest if the host's face be averted.

[எழு: அனிச்சம், விருந்து. பய்னி: குழையும். மோப்ப. (வி. 86.)]

LXIX பாடம்.

THE FEAR OF SIN.

தீவினை அச்சம்.

[பாவங்களாய் உள்ளவைகளைச்செய்தற்கு அஞ்சுதல்.]

[தீவினைத்தன்மை.]

402. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினும் அஞ்சப் படும்.

Evil worse than fire.

[எழு: தீயவை. பயனி: அஞ்சபப்படும். தீயவை, தீய. (வி. 93.)]

[தீவினைப் பயன்.]

403. மறந்தும் பிறன்கேடு சூழற்க! சூழின்
அறஞ் சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

He who meditates evil to others will perish.

[எழு: ஒருவன் (தொகை), அறம். பயனி: சூழற்க, சூழும்.]

[இதுவுமது.]

404. தீப்பால தான் பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல் வேண்டா தான்.

Don't injure others unless you wish to perish.

[எழு: வேண்டாதான். பயனி: செய்யற்க. தீப்பால = தீமைக்கூறுடைய வினைகள்.]

[இதுவுமது.]

405. எனைப்பகை உற்றாரும் உய்வர்;
வினைப்பகை வீயாது பின்சென் றடும்.

You may escape from other foes; not from a just retribution.

[எழு: உற்றாரும், வினைப்பகை. பயனி: உய்வர், அடும்.]

[இதுவுமது.]

406. தீயவை செய்தார் கெடுத னிழற்றன்னை
வீயா தடி உறைந் தற்று.

Destruction, like a shadow, dogs the steps of the evil-doer.

[எழு: கெடுதல். பயனி: அற்று.]

[இதுவுமது.]

407. தன்னைத் தான் காதலன் ஆயின், எனைத் தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

If you love yourself commit no evil.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: துன்னற்க!]

LXX பாடம்.

UNWORTHY CONDUCT.

கூடா ஒழுக்கம்.

[அறத்தோடு பொருந்தாதாகிய தீய ஒழுக்கம்.]

[மனத்தூய்மை.]

408. வான்உயர் தோற்றம் எவன்செய்யுந் தன்னெஞ்சந்
தான்அறி குற்றப் படின்?

What is appearance when a man does what his conscience disapproves of?

[எழு: தோற்றம். பயனி: செய்யும்.]

[புற வடிவம்.]

409. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

The weak man like a cow with a tiger's skin.

[எழு: உருவம். பயனி: அற்று. வலியினிலைமையான் = வல்லமை இல்லாத இயல்புடையான்.]

[தவவேடம்.]

410. தவமறைந் தல்லவை செய்தல்,
புதன்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

The hypocrite like the fowler in the thicket.

[எழு: செய்தல். பயனி: அற்று. தவம்=தவவேஷத்திலே. (வி. 162.)]

[இதுவுமது.]

411. நெஞ்சிற் றுறவார் துறந்தார் போல்
வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்.

None so bad as the pretended ascetic.

[எழு: வன்கணார். பயனி: இல்.]

[இதுவுமது.]

412. மனத்தது மாசாக, மாண்டார் நீர் ஆடி
Many who hide themselves under water.
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

[எழு: மாந்தர். பயனி: பலர். மாண்டார்=மாட்சிமையுள்ளவர்களாக.]

[ஒழிக்கத்தக்கவை.]

413. மழித்தலு நீட்டலும் வேண்டா, உலகம்
No need of shaving, or of letting hair grow if you avoid scandalous evils.
பழித்த தொழித்து விடின்.

[எழு: மழித்தலும் நீட்டலும். பயனி: வேண்டா.]

LXXI பாடம்.

ABSTAINING FROM INJURING OTHERS.

இன்னா செய்யாமை.

[தனக்கு ஒரு பயனைக்குறித்தாவது, வைரம்பற்றிஆவது, சோர்வினால் ஆவது, ஒருயிருக்குத் துன்பந் தருபவைகளைச் செய்யாமை.]

[பெரியோர் செய்கை.]

414. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும்
The good are never tempted to harm others.
பிறர்க்கின்னா செய்யாமை மாசற்றார் கோள்.

[எழு: செய்யாமை. பயனி: கோள்.]

[தீமைக்கு நன்மை.]

415. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
Shame evil-doers with good.
நன்னயஞ் செய்து விடல்.

[எழு: ஒறுத்தல். பயனி: விடல்.]

[இரக்கம்.]

416. அறிவினான் ஆகுவ துண்டோ, பிறிதினோய்
தந்நோய் போற் போற்றாக் கடை?

To feel others' woes as our own is the highest result of learning.

[எழு: ஆகுவது. பயனி: உண்டோ.]

[அறிந்து தீமை செய்யாமை.]

417. இன்னா எனத்தான் உணர்ந்தவை
துன்னாமை வேண்டும் பிறன்கட் செயல்.

Do not to others what you would not suffer from them.

[எழு: துன்னாமை. பயனி: வேண்டும்.]

[புண்ணியம்.]

418. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானா
மாணா செய் யாமை தலை.

To abstain from wilful evil is the highest virtue.

[எழு: செய்யாமை. பயனி: தலை. மாணா = தகாதவைகளை.]

[அதிசயம்.]

419. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்?

Who would do hurt to others when he felt the pain of it himself?

[எழு: செயல். பயனி: என்கொல்.]

LXXII பாடம்.

PERSEVERING EFFORT.

தாளாண்மை.

[முயற்சியை ஆளுந்தன்மை; முயற்சி உடைமை.]

[பேராண்மை.]

420. தீங்கரும் பீன்ற திரள்கால் உளை அலரி
தேங் கமழ் நாற்றம் இழந்தாஅங்
கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பின் என்னும், பெயர் பொறிக்கும்
பேராண்மை இல்லாக் கடை?

What is high birth without manly effort, that diffuses the fragrance of a good name around?

[எழு: என். பயனி: ஆம். தீங்கரும்பீன்ற மு—ன=இனிய கரும்பு ஈனப் பட்ட திரண்ட தாளையும் மயிரைப்போன்ற தூய்மையையும் உடைய பூ இனிதாக மணங்கமழுகிற வாசனையை இழந்தாற்போல. (வி. 152—7.)]

[தாளாண்மையின் இயல்பு.]

421. பெரு முத்தர் ஐயர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றூர்வர் கயவர்;
கருனையைப்
பேரும் அறியார் நனி விரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்.

The base eat the food given by the great; what the persevering acquire by effort is ambrosia.

[எழு: கயவர், நீரும். பயனி: ஆர்வர், விடும். கருனைச்சோறு. (வி. 156.)]

[இதுவுமது.]

422. இசையா தெனினும் இயற்றிஓர் ஆற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை!
இசையுங்கால்—
கண்டற் றிரைஅலைக்குங் கானல் அந் தண் சேர்ப்ப!—
பெண்டிரும் வாழாரோ மற்று?

To persevere against difficulties is worthy of man.

[எழு: ஆண்மை, பெண்டிரும். பயனி: நிற்பதாம், வாழாரோ.]

[சுற்றத்தாரின் பயன்.]

423. வயாவும், வருத்தமும், ஈன்றக்கா னோவும்,
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

Suffering forgotten when one sees one's friends around.

[எழு: வருத்தம். பயனி: கெடும். கவான் = தொடையினிடத்தில். அசா = தளர்ச்சியால். (வி. 152.) உசா = சூழ்ச்சியையுடைய. (வி. 152.) மகற் = மகனை.]

[நல்லோர் கடன்.]

424. அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம் போ னேர் ஒப்பத் தாங்கிப்
பழுமரம் போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

Both fruit and shade.

[எழு: வாழ்வது. பயனி: கடன்.]

[இதுவுமது.]

425. அடுக்கன் மலைநாட!—தற்சேர்ந் தவரை
எடுக்கலம் என்றார் பெரியோர்;—
அடுத் தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

The wise never refuse to sustain their kindred. The bough bears all the fruits.

[எழு: பெரியோர், கொம்பு. பயனி: என்றார், இல்லையே. எடுக்கலம்= எடுக்கமாட்டேம். (எடு, கு, அலம். வி. 93. 108. 135.) பொறுக்கலா = பொறுக்கமாட்டாத.]

LXXIII பாடம்.

EVIL ASSOCIATION.

சிற்றினஞ் சேராமை.

[அறிவைவேறுபடுத்தி, இருமையுங் கெடுக்கும் இனத்தைப்பொருந்தாமை.]

[சிற்றினம் சேர்வர், சேராதவர்.]

426. சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்
சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்.

The great fear and the mean cultivate the friendship of the low.

[எழு: பெருமை, சிறுமை. பயனி: அஞ்சும், விடும். பெருமை. (வி. 162.)]

[இனத்தின் பயன்.]

427. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு.

Water takes its taste from the soil.

[எழு: அறிவு. பயனி: அற்றாகும்.]

[இதுவுமது.]

428. மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி;
இனத்தானாம் இன்னான் எனப்படுஞ் சொல்.

The mind makes the man. Association gives character.

[எழு: உணர்ச்சி, சொல். பயனி: ஆம்.]

[இதுவுமது.]

429. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

Purity of mind, deed and connexion.

[எழு: இரண்டும். பயனி: வரும்.]

[இதுவுமது.]

430. மனநலம் மன்னுயிர்க் காக்கம்;
இனநலம் எல்லாப் புகழுந் தரும்.

Sterling qualities of mind. Good connections.

[எழு: மனநலம், இனநலம். பயனி: ஆக்கம், தரும்.]

[இதுவுமது.]

431. நல்லினத்தின் ஊங்குந் துணை இல்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

No help like good connections. Nothing brings sorrow like evil connections.

[எழு: துணை, படுப்பதூஉம். பயனி: இல்லை, இல்.]

LXXIV பாடம்.

RELATIVES.

சுற்றத்தார்.

[சுற்றத்தார் செய்கை.]

432. பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

Faithfulness even in adversity.

[எழு: பாராட்டுதல். பயனி: உள.]

[சுற்றத்தாரின் நன்மை.]

433. விருப்பறாச் சுற்றம் இயையின்
அருப்பறா ஆக்கம் பலவுந் தரும்.

Attached relatives give ever blooming prosperity.

[எழு: அது (அப்படி இயைதல்.) பயனி: தரும்.]

[அளவறிந்து வாழ்தல்.]

434. அளவளா வில்லாதான் வாழ்க்கை,
குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று.

The prosperity of the man who does not confide in his friends is like a full tank without a bank.

[எழு: வாழ்க்கை. பயனி: அற்று.]

[செல்வப் பயன்.]

435. சுற்றத்தாற் சுற்றப் பட ஒழுகல், செல்வந் தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

The end of wealth is living surrounded by one's kindred.

[எழு: ஒழுகல். பயனி: பயன். பெற்றத்தால் = பெற்றதால். (வி. 41.)]

[கொடை மாட்சி.]

436. பெருங் கொடையான், பேணான் வெகுளி, அவனின்
மருங்குடையார் மா நிலத் தில்.

The liberal and mild have endless relations.

[எழு: உடையார். பயனி: இல்.]

[காக்கை.]

437. காக்கை கரவா கரைந்துண்ணும்;
ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள.

The crow eats openly calling its friends; wealth belongs to such.

[எழு: காக்கை, ஆக்கமும். பயனி: உண்ணும், உள.]

LXXV பாடம்.

THEFT.

களவு.

[பிறர் உடைமையாய் உள்ளவைகளில் யாதொருபொருளை அவரை வஞ்சித்துக்கொள்ளுதல்.]

[களவு நினைவு.]

438. உள்ளத்தால் உள்ளலுந் தீதே, பிறன் பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல்.

It is evil even to covet one's neighbour's good.

[எழு: உள்ளலும். பயனி: தீதே. எனல் = என்பதை, என்ற நினைவை.]

[களவின் தீமை.]

439. களவினால் ஆகிய ஆக்கம்
அளவிறந் தாவது போலக் கெடும்.

The gain of theft is only seeming: it perishes.

[எழு: ஆக்கம். பயனி: கெடும்.]

[இதுவுமது.]

440. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்க தன் னெஞ்சு!

He who would not be despised must guard his mind.

[எழு: வேண்டுவான். பயனி: காக்க. கள்ளாமை = கள்ளாமல். காக்க. (வி. 85.)]

[பெரியோர் கைவிடல்.]

441. களவென்னுங் கார் அறி வாண்மை
அளவென்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்.

Such folly not found among the discriminating.

[எழு: காரறிவாண்மை. பயனி: இல். கார் + அறிவு + ஆண்மை = காரறிவாண்மை = தீமையாகிய அறிவு = திருட்டுத்தொழிலுக்குற்ற உபாயம், தந்திரம், விவேகமுதலானவை.]

442. களவின்கட் கன்றிய காதல்
விளைவின்கண் வீயா விழுமந் தரும்.

The desire of theft brings undying sorrow.

[எழு: காதல். பயனி: தரும்.]

[களவு இயற்கை.]

443. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

Virtue natural to these. Deceit to those.

[எழு: கரவு. பயனி: நிற்கும்.]

LXXVI பாடம்.

GAMBLING.

சூது.

[அறம் பொருள் இன்பங்களுக்குத் தடையாகிய சூதாடல்.]

[சூதின் தீமை.]

444. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை! வென்றதூஉம்
தூண்டிற் பொன் மீன் விழுங்கி யற்று.

Temporary winning only a bait for the unwary.

[எழு: ஒருவன் (தொகை), வென்றதூஉம். பயனி: வேண்டற்க, அற்று.]

[இதுவுமது.]

445. ஒன்றெய்தி, நூறிழக்குஞ் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு?

To gain one and loose a hundred.

[எழு: ஆறு. பயனி: உண்டாங்கொல்.]

[இதுவுமது.]

446. சிறுமை பலசெய்து சீர்அழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

Sure cause of poverty.

[எழு: ஒன்று. பயனி: இல்.]

[இதுவுமது.]

447. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

It ruins estate and disposition.

[எழு: அது (தொகை.) பயனி: கெடுக்கும்.]

[இதுவுமது.]

448. உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி என் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின்.

He will possess neither garment, money, food, fame nor learning.

[எழு: ஐந்தும். பயனி: அடையா.]

[இம்மையிலும் மறுமையிலுந் துன்பத்தை உண்டாக்கும்.]

449. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ,
அருள்கெடுத் தல்லல் உழப்பிக்குஞ் சூது.

It destroys one's estate, and subjects one to falsehood and distress.

[எழு: சூது. பயனி: உழப்பிக்கும்.]

LXXVII பாடம்.

ABSTINENCE FROM INTOXICATING DRINKS.

கள்ளுண்ணாமை.

[கள்ளுண்ணலின் இழிவு.]

450. உட்கப் படாஅர், ஒளி இழப்பர், எஞ்ஞான்றுங்
கட் காதல் கொண்டொழுகு வார்.

None fears, and none esteems the man who loves drink.

[எழு: ஒழுகுவார். பயனி: படாஅர், இழப்பர். கட்காதல்கொண்டு= கள்ளின்மேல் ஆசை கொண்டு. (வி. 152. 34.)]

[இதுவுமது.]

451. உண்ணற்க கள்ளை! உணில் உண்க, சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.

Those only drink who desire contempt.

[எழு: ஒருவன் (தொகை.) வேண்டாதார். பயனி: உண்ணற்க! உண்க!]

[இதுவுமது.]

452. நாண் என்னு' நல்லாள் புறங் கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங் குற்றத் தார்க்கு.

Modesty will depart from those who are addicted to this despicable fault.

[எழு: நல்லாள். பயனி: கொடுக்கும்.]

[இதுவுமது.]

453. துஞ்சினர் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்று'
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

The sleeping are like the dead. So they who drink take poison.

[எழு: துஞ்சினர், உண்பவர். பயனி: அல்லர், உண்பார்.]

[கள்ளுண்ணலின் தீமை.]

454. களித்தறியேன் என்பது கைவிடுக! நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும்.

Don't do it even secretly. The fault concealed in the mind increases.

[எழு: ஒருவன் (தொகை.) ஒளித்தது. பயனி: கைவிடுக! மிகும்.]

[இவனைத் தெளிவித்தல் முடியாமை.]

455. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

Trying to convince a drunkard is like taking a light to seek a man under water.

[எழு: காட்டுதல். பயனி: அற்று. தீத்துரீஇயற்று = விளக்கினால் தேடுதலை ஒக்கும். (வி. 152. 79.)]

LXXVIII பாடம்.

FORGETTING ONE'S SELF.

மறதி.

[அழகும், செல்வமும், ஆற்றலும் முதலானவைகளால் மகிழ்ந்து, செய்யத்தக்க காரியங்களைச் செய்யாமல் மறந்துவிடுதல்.]

[மறதி இன்னதிலும் தீது எனல்.]

456. *இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

Forgetting one's self through pride worse than passion.

[எழு: சோர்வு. பயனி: தீது.]

[மறதியின் தீமை.]

457. பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்ச நிரப்புக் கொன் றாங்கு.

Poverty destroys learning, so this destroys reputation.

[எழு: பொச்சாப்பு. பயனி: கொல்லும்.]

[இதுவுமது.]

458. அச்சம் உடையார்க் கரண் இல்லை; ஆங்கில்லைப்
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

No good to these; as no defence to the coward.

[எழு: நன்கு. பயனி: இல்லை.]

[இதுவுமது.]

459. *முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

He will rue when it is too late to guard himself.

*[எழு: இழுக்கியான். பயனி: விடும். ஊறு இரங்கிவிடும் = இடையூறு உண்டான காலத்தில் தன் பிழையை நினைத்து இரங்கி விடுவான்.]

[மறதியில்லாமையின் பயன்.]

460. அரிய என் றாகாத இல்லைப், பொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

Nothing hard when a man heedfully uses proper instruments.

[எழு: ஆகாத. பயனி: இல்லை.]

[இதுவுமது.]

461. உள்ளிய தெய்தல் எளிது, மன், மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்.

Every thing easy of acquisition if you know exactly what you aim at.

[எழு: எய்தல். பயனி: எளிது.]

LXXIX பாடம்.

DECEIT.

கரவு.

[பிறரை வஞ்சிப்பது.]

[கரவின் பயன்.]

462. நஞ்சுடைமை தான் அறிந்து நாகங் கரந்துறையும்;
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு:
நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர், கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

Deceit conceals itself.
Honesty is open and fearless.

[உறையும். (வி. 149.)]

463. செயக்கடவ அல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிகம் என்னும்?
செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று, தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

Cutting off a man's head to save him the pain of being spoken sharply to!

[எழு: நாகரிகம். பயனி: என்னும்? பாற்று. கடவ. (வி. 125. 93.) செய்தும் = செய்வோம். (வி. 83.)]

[தீமையின் இயல்பு.]

464. தீய செயற்செய்வார் ஆக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல;
தீயன
நல்லன ஆகாவாம்; நாவின் புற நக்கிக்
கொல்லுங் கவய மாப் போல்.

Evil is evil even when it prospers. Evil can't become good.

[கடவுள் மனத்தில் நிகழும் பாவத்தையும் பார்த்தல்.]

465. வஞ்சித் தொழுகு மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்!
வஞ்சித்த
எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

Don't think to deceive God.

[எழு: நீவிர் (தொகை.) குலைவது. பயனி: மகிழன்மின், அறிவு. காணும். (வி. 137.)]

[பகைவரின் நட்பு.]

466. வாள்போற் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு!

Fear not open enemies. Fear them when disguised as friends.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: அஞ்சற்க அஞ்சுக!]

[உட்பகை.]

467. எட் பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாங் கேடு.

However small enemies within the camp bring destruction.

[எழு: உள்ளது. பயனி: ஆம் எட்பகவன்ன = எள்ளின் பிளவைப் போன்ற.]

LXXX பாடம்.

GOOD MEN.

மேன்மக்கள்.

[மேம்பாட்டுத் தன்மை உடையார்.]

[மேன்மக்கள் வறுமை யடைந்தும் மேன்மை ஒழியாமை.]

468. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்,
கெட்டாலும் மேன்மக்கண் மேன்மக்க ளே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

The good remain so even though in adversity.

[இது சவலை வெண்பா. (வி. 188.) அட்டாலும். பகுதி. சுடு. (வி. 142.) அளவல்ல = அளவில்லாமல்.]

[இதுவுமது.]

469. சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே;
அல்லாதார் கெட்டால் அங் கென்னாகுஞ்? சீரிய
பொன்னின் குடம் உடைந்தாற் பொன்னாகும்; என்னாகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்.

The worthy not injured by adversity. The golden vessel and the earthen.

[பொன்னின் = (வி. 66.)]

[மேன்மக்கள் ஒன்றுக்கும் அஞ்சாமை.]

470. உடற்கு வரும் இடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கும் ஒரு கோடி ஆக
நடுக்கம் உறார்,—
பண்ணிற் புகலும் பனிமொழியாய்!—அஞ்சுமோ
மண்ணிற் புலியை மதி மான்?

The deer in the moon fears not the tiger on earth. The heavenly minded care not for earthly sorrows.

[எழு: உற்றோர். பயனி: உறார். ஆக என்பதின் பின் இருந்தாலும் என்பதைக் கூட்டி உணர்க. பண்ணின் = பண்ணைப்போல. (வி. 61.) மதி மான். (வி. 157.) பனிமொழியாய். (வி. 155. 93.)]

[செல்வம் உண்டாகியவகை.]

471. தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாள் ஊன்றி,
எய்த்தும்
அறங் கடையிற் செல்லார், பிறர் பொருளும் வெஃகார்,
புறங் கடைய தாகும் பொருள்.

The virtuous obtain all real good.

[எழு: பொருள். பயனி: ஆகும் செல்லார். வெஃகார் = செல்லாதவ ராகிய வெஃகாதவருடைய.]

[பெரியோர் அடையும் வறுமை.]

472. உறைப்பருங் காலத்தும் ஊற்றுநீர்க் கேணி
இறைத் துணினும் ஊர்ஆற்றும் என்பர்: கொடைக் கடனுஞ்
சாஅஅயக் கண்ணும் பெரியார்போன் மற்றையார்
ஆஅஅயக் கண்ணும் அரிது.

In times of drought the spring saves the village. Hard for mean spirits to become noble.

[எழு: செய்தல் (தொகை.) பயனி: அரிது. உறைப்பருங் காலத்தும்= மழைபெய்தல் அரிய காலத்திலும். சாஅஅய = சாகிற. (வி. 87. 14.) ஆஅ அய = ஆயிய. (வி. 87.)]

[பெருமை இன்னது.]

473. ஆக்கும் அறிவான் அலது பிறப்பினுன்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க!
நீக்கு
பவர்ஆர் அரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு?

Do not seek for any exaltation but what comes from true knowledge.

[எழு: நீவிர், நீக்குபவர், ஒருவர் (தொகை.) பயனி: வேண்டற்க! (ஆர், கவரார்.)]

LXXXI பாடம்.

GOOD PERSONS.

மேன்மக்கள்.

[சாதி.]

474. சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்
மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்,
பட்டாங்கில் உள்ள படி.

Only two castes.

[ஒழிய. (வி. 86. (3.)) இடாதார். (வி. 95.) கடைசி அடியிலே இது ஆகும் எ-து தொக்கு நிற்கிறது.]

[மேன்மக்கள் இன்னர்.]

475. ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்; அந்நாளும் அவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்;
ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து.

The river sand burns the feet, and affords springs of water. Generosity even in poverty.

[ஆற்றுப்பெருக்கு = ஊற்றுப்பெருக்கு. (வி. 119. (3.)) குடிப்பிறந்தார், எழுவாய் நல் கூர்ந்தார் ஆனாலும். (வி. 132.)]

[பலவகையான நலங்கள்.]

476. தண்ணீர் நில' நலத்தாற், றக்கோர் குணங்கொடையாற்,
கண்ணீர்மை மாறாக் கருணையாற்,
பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றால், கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதம் ஆம் என்றே அறி!

The excellence of these is thus manifested.

[இன்னவற்றில் இன்னவை நலம் எனல்.]

477. இழுக்குடைய பாட்டிற் கிசை நன்று; சாலும்
ஒழுக்கம் உயர் குலத்தி னன்று;
வழுக்குடைய
வீரத்தி னன்று விடா நோய்; பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி.

Prose better than halting verse; good conduct than high birth; disease than cowardice; loneliness than a wife that fears not disgrace.

[மேன்மக்களின் இயல்பு.]

478. சான்றாண்மை, சாயல் ஒழுக்கம் இவை மூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது,—
வான்றோயும்
மைதவழ் வெற்ப!—படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

These excellencies only found among the high-born.

[மேன்மக்களின் ஒழுக்கம்.]

479. இருக்கை எழலும், எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன,
குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார்; கயவரோ
டொன்றா உணரற்பாற் றன்று.

These courtesies and amenities only among respectable people.

[இருக்கை எழல் = இருக்கையை விட்டு எழுந்திருக்குதல். விடுப்ப ஒழிதல் = அவர்கள் அனுப்பிவிட்டால் உடனே போய் விடுதல்.]

LXXXII பாடம்.

THE EXCELLENT.

மேன்மக்கள்.

[கீழ்மக்கள்.]

480. கல்லாமை அச்சம், கயவர் தொழில் அச்சஞ்,
சொல்லாமை உள்ளும் ஓர் சோர்வச்சம்,
எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை அச்சம்; மரத்தார் இம்
மாணுக் குடிப்பிறந் தார்.

These various fears only among the really worthy.

[இம்மாணு = இவ்வகையான மாட்சிமையில்லாத.]

[மேன்மக்களின் இயல்பு.]

481. இன நன்மை, இன் சொல், ஒன் றீதல், மற் றேனை
மன நன்மை, என்றிவை எல்லாம்,
கனமணி
முத் தோ டிமைக்கு முழங்குவரித் தண் சேர்ப்ப!
இற் பிறந்தார் கண்ணே உள.

These excellent things found among the noble.

[எழு: எல்லாம். பயனி: உள. மற்று, அசைநிலை.]

[மேன்மக்கள், கீழ்மக்கள்.]

482. செல்லா விடத்துங் குடிப் பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்;
புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய் பரி மா போற்
பொருமுரண் ஆற்றுதல் இன்று.

The mean even in prosperity do not do what the good effect even in adversity.

[எழு: சிறியவர். பயனி: செய்யார்.]

[மேன்மக்களின் செயல்.]

483\. எற்றொன்றும் இல்லா இடத்துங் குடிப் பிறந்தார்
அற்றுத் தற் சேர்ந்தார்க் கிசைவிடத் தாற்றுவர்;
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்.

The noble even in poverty afford aid to those who seek them.

[எழு: குடிப்பிறந்தார். பயனி: ஊற்றுவர்.]

[மேன்மக்களை நிலவுக்கொப்பிடல்.]

484\. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்;மற்
றிங்கண்
மறு வாற்றும்; சான்றோர்அஃ தாற்றார், தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

The moon and the noble differ in this: She endures her spots, they endure not any stain!

[மேன்மக்களின் செயல்.]

485\. இசையும் எனினும், இசையா தெனினும்,
வசைதீர எண்ணுவர் சான்றோர்;
விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினிற் றீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்?

Better miss a lion, than hit a jackal. Aim high!

[பிழைப்பு = பிழைக்க.]

LXXXIII பாடம்.

THE NOBLE AND THE MEAN.

பெரியோர்—சிறியோர்.

[பெரியோர் சிறப்பு.]

486. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

The greatness of those who live for both world.

[எழு: பெருமை. பயனி: பிறங்கிற்று. உலகு = உலகத்திலே. (வி. 152.)]

[பெரியோர் செயல்.]

487. செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

The great achieve hard things; not so the mean.

[எழு: பெரியர், சிறியர். பயனி: செய்வார், செய்கலாதார். செய்கலாதார் = செயல் ஆகார் = செய்யமாட்டார்கள்.]

[பெரியோர் கல்வி.]

488. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

The veda speaks of the greatness of the men whose words are words of integrity.

[எழு: மறைமொழி. பயனி: காட்டிவிடும். செயப்படு: பெருமையை.]

[பெரியோர் ஒழுக்கம்.]

489. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

The wrath of those who have climbed the hill of virtue not to be withstood.

[எழு: காத்தல். பயனி: அரிது.]

[சிறியோர்.]

490. அச்சமே கீழ்களதாசாரம், எச்சம், அவா உண்டேல் உண்டாஞ் சிறிது.

Fear the guide of the base. For the rest, desire too may effect a little.

[எழு: அச்சம், சிறிது. பயனி: ஆசாரம், உண்டாம்.]

LXXXIV பாடம்.

LOVE.

அன்பு.

[அன்பின் சிறப்பு.]

491. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர் புன்கணீர் பூச றரும்.

No bars can restrain love! The tears of the beloved cause a tempest in the soul.

[எழு: தாழ், கணீர். பயனி: உண்டோ, தரும். கணீர் = கண்ணீர். (வி. 41.) பூசறரும் = பூசல் தரும். (வி. 38.)]

[அன்பின் பயன்.]

492. அன்பிலார் எல்லாந் தமக்குரியர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

The unloving live all to themselves. The loving live wholly for others.

[எழு: இலார், உடையார். பயனி: உரியர், உரியர். என்பு = உடம்பால். (வி. 137.)]

[அன்பின் சிறப்பு.]

493. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க் கென்போ டியைந்த தொடர்பு.

Love like the union of body and soul.

[எழு: அறிந்தோர் (தொகை.) பயனி: என்ப. அத்தொடர்ச்சியின் பயன் அன்பு; அல்லது, அத்தொடர்ச்சியைப்போலவே இருக்கும் அன்பு.]

[அன்பில்லாமையின் தீமை.]

494. என்பில் அதனை வெயிற் போலக் காயுமே
அன்பில் அதனை அறம்.

The lord of virtue will wither the unloving as the sun dries up insects.

[எழு: அறம். பயனி: காயும். என்பில் அதனை = என்பில்லாததை. அறம் = அறக்கடவுள். (வி. 162.)]

[இதுவுமது.]

495. அன்பகத் தில்லா உயிர் வாழ்க்கை வன் பாற் கண்
வற்றன் மரந் தளிர்த் தற்று.

Life without love is like a dead tree in hard, barren soil!

[எழு: வாழ்க்கை. பயனி: அற்று.]

[அன்பின் பெருமை.]

496. அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்பு தோல் போர்த்த உடம்பு.

That is a body where love resorts; all else, bones covered with skin.

[எழு: வழியது, உடம்பு. பயனி: உயிர்நிலை, போர்த்த. என்பு தோல் போர்த்த = எலும்பைத் தோலினால் போர்க்கப்பட்டவைகள்.]

LXXXV பாடம்.

BENEVOLENCE.

அருள்.

[எல்லா உயிர்களின்மேலுஞ் செல்வதாகிய கருணை.]

[அருளின் சிறப்பு.]

497. அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்;
பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள.

This wealth is wealth. The rest is shared by the base.

[எழு: அருட்செல்வம், பொருட்செல்வம். பயனி: செல்வம், உள.

[அருளின் பயன்.]

498. அருள்சேர்ந்த நெஞ்சினாற் கில்லை
இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்.

To the soul possessed by this, no entrance into the evil world of darkness.

[எழு: புகல். பயனி: இல்லை.]

[இதுவுமது.]

499. மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

No fear-causing sins to him who walks in benevolence to all.

[எழு: பெரியோர் (தொகை.) பயனி: என்ப.]

[இதுவுமது.]

500. அல்லல் அருள் ஆள்வார்க் கில்லை, வளி வழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

No trouble to the benevolent. The fertile, vast, pendant globe round, which the tempests blow, is witness of this.

[எழு: அல்லல். பயனி: இல்லை.]

[அருளில்லாமையின் தீமை.]

501. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை,
பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லா கியாங்கு.

To the poor this world is not; so to the unkind that world is not.

[எழு: அவ்வுலகம். பயனி: இல்லை.]

[அருளாட்சிக்கு நியாயம்.]

502. வலியார்முற் றன்னை நினைக்க, தான் றன்னின்
மெலியார்மேற் செல்லும் இடத்து.

When a weaker one stands before you, think how you felt when you stood before one stronger than yourself.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: நினைக்க. (வி. 85.)]

LXXXVI பாடம்.

KINDLINESS.

கண்ணோட்டம்.

[கண்ணோட்டத்தின் சிறப்பு.]

503. கண்ணோட்டத் துள்ள துலகியல், அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

Benevolence causes the world's affairs to prosper; others a burden.

[எழு: இயல், உண்மை. பயனி: உள்ளது, பொறை. நிலக்கு = நிலத்துக்கு. (வி. 41.) உண்மை = இருப்பது.]

[இதுவுமது.]

504. பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்? கண்ணென்னுங்
கண்ணோட்டம் இல்லாத கண்?

A tune without melody and eye without kindliness!

[எழு: பண், கண். பயனி: என்னும்?]

[கண்ணோட்ட மில்லாமையின் இழிவு.]

505. உளபோன் முகத்தெவன் செய்யும்
அளவினாற் கண்ணோட்டம் இல்லாத கண்?

What is the eye without due kindness?

[எழு: கண். பயனி: செய்யும்.]

[கண்ணோட்டத்தின் சிறப்பும், அதில்லாமையின் இழிவும்.]

506. கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம், அஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

Without it the eye only a wound.

[எழு: கண்ணோட்டம், கண் (தொகை.) பயனி: அணிகலம், உணரப்படும்.]

[கண்ணோட்டமில்லாமையின் இழிவு.]

507. மண்ணோ டியைந்த மரத்தனையர்
கண்ணோ டியைந்துகண் ணோடா தவர்.

The unkindly like trees.

[எழு: ஓடாதவர். பயனி: அனையர்.]

[கண்ணோட்டத்தின் பயன்.]

508. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு.

Those who know how to accomplish their purpose kindly are masters of the world.

[எழு: இவ்வுலகு. பயனி: உடைத்து.]

LXXXVII பாடம்.

CHILDREN.

புதல்வர்.

[நல்ல மக்களைப் பெறுதல்.]

[மக்களின் இனிமை.]

509. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

The rice fingered by one's children sweeter than ambrosia.

[எழு: கூழ். பயனி: இனிது.]

[இதுவுமது.]

510. மக்கண்மெய் தீண்டல் உடற்கின்ப மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு.

The fondling them and hearing their words.

[எழு: தீண்டல், கேட்டல். பயனி: இன்பம். மற்று, அசைநிலை.]

[மக்களில்லாதவரின் எண்ணம்.]

511. குழல் இனிதி யாழ் இனி தென்ப, தம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்

The prattle of one's infants sweeter than the pipe and lute.

[எழு: கேளாதவர். பயனி: என்ப.]

[தந்தையின் கடன்.]

512. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

The father should make his son fit to shine in the assembly.

[எழு: செயல். பயனி: நன்றி. இருப்ப. (வி. 86.) (ரு.)]

[மைந்தரின் பெருமை.]

513. தம்மிற் றம் மக்கள் அறிவுடைமை மா நிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

Pleasant to be excelled by one's son.

[எழு: உடைமை. பயனி: இனிது.]

[தாயின் உவகை.]

514. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

The mother's joy greater when her son is praised than when he was born.

[எழு: தாய். பயனி: உவக்கும்.]

LXXXVIII பாடம்.

GOVERNMENT.

அரசு.

[இறைவாங்கல்.]

515. குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்ற
மடிகொன்று பால்கொளலு' மாண்பே;
குடி ஓம்பிக்
கொள்ளும் ஆ கொள்வோர்க்குக் காண்டுமே மா நிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

The king who ruins his subjects by excessive taxation like the man who cuts off the udder to get the milk.

[ஆ = ஆறு, வகை.]

[அரச ஒழுக்கம்.]

516. இன்று கொளற்பால நாளைக் கொளப்பொறான்,
நின்று குறை இரப்ப நேர்படான்,
சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன்.

These faults mark the wild robber, not the king.

[இதுவும் அது.]

517. முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி,
உடுப்ப உடுத்துண்ப உண்ணா,
இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கேளார், கண் விழியார்
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

These mark a breathing corpse.

[உண்ணா = உண்டு.]

[அரசினியல்பு.]

518. ஒற்றிற் றெரியா, சிறைப்புறத் தோர்தும் எனப்
பொற்றோ டுணையாத் தெரிதந்துங்
குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை, சென்று
முறை இடினுங் கேளாமை அன்று.

To inspect personally not trusting in spies, and knowing that it is hard to find out faults, is the duty of good governor.

[எழு: அஞ்சுவதே. பயனி: செங்கோன்மை. தெரிதந்தும் = தெரிந்தும். (வி. 124. (5.))]

[அரசன் கேள்வியை ஆராய்தல்.]

519. ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோடுதோரீஇக் கொள்கை முதுக்குறைவு;
நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என் சொலார்? தாய்க் கொலை
சால்புடைத் தென்பாரும் உண்டு.

To investigate rigidly himself is his duty; for there are shameless liars in the world.

[எழு: கொள்கை, என்பார், என்பாரும். பயனி: முதுக்குறைவு, சொலார், உண்டு.]

[இறையிடுதல்.]

520. முறை தெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்க்கும்
இறை திரியா நேர் ஒக்கல் வேண்டும்;
முறை திரிந்து
நேர் ஒழுகான் ஆயின் அதுவாம் ஒருபக்க
நீர் ஒழுகிப் பால் ஒழுகும் ஆறு.

Impartiality.

[அதுவாம் ஆறு = அது அந்த ஆறாக ஆகும்.]

LXXXIX பாடம்.

JUST AND UNJUST GOVERNMENT.

செங்கோன்மை; கொடுங்கோன்மை.

[அரசனாலே செயப்படும் முறையினது தன்மை.]

[செங்கோன்மை மாட்சி.]

521. குடிதழீஇக் கோல் ஓச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

The world at the feet of the king who loves his people.

[எழு: உலகு. பயனி: நிற்கும். தழீஇ. (வி. 79. 86.)]

[செங்கோல் செலுத்தியவன் அடையும் பயன்.]

522. இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கு' முட்டாச் செயின்.

The king guards the earth. His justice guards him.

[எழு: இறை, முறை. பயனி: காக்கும்.]

[கொடுங்கோன்மையின் தீமை.]

523. நாடொறு' நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு' நாடு கெடும்.

The country suffers if the king does not daily administer justice.

[எழு: நாடு. பயனி: கெடும். "மன்னவனது நாடு நாடொறுங் கெடும்."]

[கொடுங்கோன்மையான் அடையுங் குற்றம்.]

524. கூழுங் குடியும் ஒருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

The unthinking king will lose treasure and people.

[எழு: அரசு. பயனி: இழக்கும். (வி. 137.)]

[இதுவுமது.]

525. அல்லற்பட்' டாற்றா' தழுதகண்ணீர், அன்றே,
செல்வத்தைத் தேய்க்கும் படை.

The tears of the suffering people, an axe to cut down the tree of his prosperity.

[எழு: கண்ணீர். பயனி: படை. (வி. 205.)]

[செங்கோன்மை, கொடுங்கோன்மை.]

526. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதின்றேல்
மன்னுவா' மன்னர்க் கொளி.

Justice confirms a kingdom; without this its glory grows dim.

[எழு: மன்னுதல், ஒளி. பயனி: செங்கோன்மை (யால் ஆகும்), மன்னுவாம்.]

XC பாடம்.

IMPARTIALITY.

நடுவு நிலைமை.

[எல்லாரிடத்தும் அறத்தின் வழுவாமல் ஒப்ப நிற்கும் நிலைமை.]

[நடுவு நிலைமையின் சிறப்பு.]

527. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

The wealth of the just undiminished endures to his offspring.

[எழு: ஆக்கம். பயனி: உடைத்து.]

[நடுவு நிலைமை கடந்த செல்வம்.]

528. நன்றே தரினு’ நடுவிகந்தாம்’ ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்!

Forsake at once the gain of injustice!

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: விடல். நன்றே = தீங்கன்றி நன்மையே. விடல். (வி. 85.)]

[நடுவு நிலைமையின் சிறப்பு.]

529. கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

Reverses of fortune will happen. Unswerving justice is the ornament.

[எழு: கேடு, பெருக்கம், கோடாமை. பயனி: அல்ல, அணி.]

[நடுவு நிலைமையில்லாமையின் தீமை.]

530. கெடுவல்யான் என்ப தறிக, தன் னெஞ்ச’
நடுவொரீஇ அல்ல செயின்.

Let the unjust hear the inner voice saying, "I deserve to perish."

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: அறிக. கெடுவல் = கெடுவேன். (வி. 83.) ஒருவன் தனது மனம் நடுவு நிலைமையை விட்டு நீங்கினால் அந் நினைவு "கெடுவல் யான்," என்று சொன்னதாக அறியக்கடவான்.]

[வார்த்தையில் நடுவு நிலைமை.]

531. சொற் கோட்டம் இல்லது செப்பம், ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

Unswerving words of justice, from a heart unbiassed.

[எழு: இல்லது. பயனி: செப்பம்.]

[வாணிகத்தில் நடுவு நிலைமை.]

532. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம், பேணிப்
பிறவுந் தம் போற் செயின்.

Merchants to guard others' goods as their own.

[எழு: அச்செய்கை (தொகை.) பயனி: வாணிகம்.]

XCI பாடம்.

VARIOUS PRECEPTS.

பன்னெறி.

[பலவழி.]

[வெளிரூபம்.]

533. மடல் பெரிது தாழை, மகிழினிது கந்தம்;
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா:
கடல் பெரிது,
மண்ணீரும் ஆகா ததன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

The thorn leaf large. The magir flower more fragrant. The sea large, the little fountain's waters sweet.

[தாழை, மகிழ். (வி. 152.) விடும். எ-து துணைவினை. (வி. 124.) மண்ணீர், உண்ணீர். (வி. 153.) சிற்றூறல். (வி. 121.)]

[அவரவரைத் தந்தம் வலிமையால் அறியவேண்டும்.]

534. உருவு கண் டெள்ளாமை வேண்டும்,—
உருள் பெருந் தேர்க் கச்சாணி அன்னார் உடைத்து.

Regard not appearances. The lynchpin.

[எழு: எள்ளாமை, உலகம் (தொகை.) பயனி: வேண்டும், உடைத்து. உருள். (வி. 153.]

[இதுவுமது.]

535. பண்டு முளைப்ப தரிசியே ஆனும்
விண்டுமி போனான் முளையாதாம்:
The corn deprived of its husk will not do for seed.
கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

[யாதொரு தொழிலையும் முடியுங்காலத்தை அறிந்து தொடங்ுதல் வேண்டும்.]

536. அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா;
A proper season must be selected.
தொடுத்த
உருவத்தா னீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

[உருவத்தால். (வி. 137*. 66.) உருவத்தானீண்ட. (வி.39.) பழா. (வி. 89.)]

[இதுவுமது.]

537. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை: இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.
The owl victorious by night is vanquished by the crow in the day.

[எழு: காக்கை, பொழுது. பயனி: வெல்லும், வேண்டும். பகல் = பகலில். (வி. 152.)]

[காலத்தை அறிதலினால் உறுபயன்.]

538. பருவத்தோ டொட்ட ஒழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.
The seizing opportunity the way to gain fortune.

[எழு: ஒழுகல். பயனி: கயிறு.]

XCII பாடம்.

ACTING WITH REGARD TO TIME AND PLACE.

காலத்தையும் இடத்தையும் அறிதல்.

[காலங்கருவி அறிந்து செய்தலினால் உறுபயன்.]

539. அருவினை என்ப உளவோ,
கருவியாற் காலம் அறிந்து செயின்?

Nothing hard when you have suitable instruments and a fitting time.

[எழு: என்ப. பயனி: உளவோ? என்ப = என்னப்பட்டவை.]

[இதுவுமது.]

540. ஞாலங் கருதினுங் கைகூடுங்,
காலங் கருதி இடத்தாற் செயின்.

You may grasp the world if you take heed to time and place.

[எழு: அது. பயனி: கைகூடும்.]

[ஊக்கம்.]

541. ஊக்கம் உடையான் ஒடுக்கம், பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

The reserve of the mighty is like the ram's receding before it rushes on its antagonist.

[எழு: ஒடுக்கம். பயனி: தகைத்து. (வி. 204.)]

[இடபேதம்.]

542. நெடும்புனலுள் வெல்லு' முதலை;
அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற.

The alligator victorious in water; slain by others if it leave it.

[எழு: முதலை, பிற. பயனி: வெல்லும், அடும். (நன்னூல். 457.)]

